# Tamil Arasu

JANUARY 1980 50 Ps.

**ELEPHANT**



**AGORATANDAVAM**

*Courtesy:* Tamil Cultural Centre,
Government of Tamil Nadu

# பதினோராவது ஆண்டில்

தமிழக அரசின்
பணிகளைப் பொது மக்களுக்கு
எடுத்துச் சொல்லி வரும் 'தமிழரசு'
பத்தாண்டுகள் நிறைவு
பெற்று, பதினோராம் ஆண்டில்
தனது பணியினைத் தொடரு-
கிறது.
பல புதிய பகுதிகளுடன் புதுமைப்
பொலிவுடன், எல்லாரும் போற்றும்
வகையில் எங்கள் பணி தொடர்ந்திடும்
'தமிழரசு' தழைத்தோங்கி
வளர உதவிடும் உங்களுக்கு
எங்கள் நன்றி
வணக்கம்.


# தமிழரசு

மலர்: 11 இதழ்: 1

1-7-1980

# நாட்டு மக்களுக்கு ஒளி விளக்காய்த் திகழ்வோம்!

## சட்டமன்றக் கூட்டவையில் மேதகு ஆளுநர் உரை

மேன்மை பொருந்திய சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களே,

வரலாற்றுச் சிறப்பு மிக்க இடைப் பொதுத் தேர்தலில் மக்களின் பெருமதிப்பையும், பேராதரவையும் பெற்று வெற்றி வாகை சூடி வந்துள்ள பேரவை உறுப்பினர்களை, வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஜனநாயகப் பரிசோதனையில் மீண்டும் தமிழக வாக்காளப் பெருமக்கள், குழப்பம் ஏதுமின்றி அச்சத்திற்கு ஆட்படாமல், தைரியத்தோடு இம்மாநிலப் பேரவைக்குத் தெளிவான தீர்ப்பை வழங்கியதிலிருந்து தங்கள் கடமைகளை எந்த அளவுக்கு உணர்ந்துள்ளார்கள் என்று எண்ணி வியக்கிறேன். நேர்மையான முறையில் அமைதியான வகையில் தேர்தல் நடைபெற்றதற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மைக்கும், தர்மத்திற்கும், நேர்மைக்கும் தமிழக மக்கள், இந்திய துணைக் கண்டத்திற்கே அளித்துள்ள பரிசுதான் இந்த ஏழாவது தமிழகச் சட்டப் பேரவையாகும். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் எதிரொலியாக, இரண்டரை ஆண்டு காலத்திலேயே ஆறாவது சட்டப் பேரவையைக் கலைத்து, மக்களின் நம்பிக்கையைப் பெற்று வாருங்கள் என்றதை ஏற்று, புதிய பொலிவோடு வீற்றுள்ள நண்பர்களைக் காணப் பெருமைப்படுகிறேன்.

உங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்து முடித்து விட்டார்கள். இனி உங்கள் கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பீர்கள் என்று நம்புகிறேன். மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை உங்கள்பால் வைத்துள்ளார்கள். இதை நான் உணர்வது போல் நீங்களும் உணர்வீர்கள் என்று கருதுகிறேன்.

அமைந்துள்ள என் அரசு, அமரர் அண்ணா அவர்களின் கொள்கைகளை நிறைவேற்ற ஆர்வம் பூண்டுள்ளது. நேர்மைக்கும் நாணயத்திற்கும் சிறப்பான பெயர் பெற்றுள்ள என் அரசு, அதை உறுதிப்படுத்தும் வகையில் தூய்மையைப் பொது வாழ்விலும் நிர்வாகத்திலும் என்றும் நிலைநாட்டும் என்று அனைவரும் திடமாக நம்பலாம். அண்ணா அவர்களால் வகுக்கப்பட்டு, இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இருமொழிக் கொள்கையைத் தொடர்ந்து இந்த அரசு உறுதியுடன் கடைப்பிடிக்கும். தனித்தன்மையை எல்லாத் துறையிலும் தன் முத்திரையாகக் காட்டிவரும் தமிழகம், பாரதத்தின் ஒற்றுமையில் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டிருப்பதில் வியப்பில்லை.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்து மக்களின் வாழ்விலும் விளக்கேற்றி வைக்க, தன்னாலான எல்லாவற்றையும் செய்ய இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்

டத்தைக் குறைக்கும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட "வேலைக்கு உணவுத்" திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும். ஏற்கெனவே இருந்த இதே அரசு அறிவித்த பல திட்டங்கள் இடைக்காலத்தில் அமலாக்கப்பட வில்லை. அவைகளுள் ஒன்றான வேலையற்ற பட்டதாரி களுக்கான உதவித் தொகைத் திட்டம் விரைவில் செயல் படுத்தப்படும்.

தமிழ் நாட்டில் அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாக உணவுத் தட்டுப்பாடு ஏதுமின்றி உணவு நிலைமை சரியாக இருந்து வருகிறது. மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட உயர்ந்த விலையில் குவிண்டால் ஒன்றுக்கு 105 ரூபாய் கொடுத்து, அரசு சார்பில் நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல்லை நேரடிக் கொள்முதல் நடத்தி வந்துள்ளது. விவசாயிகளின் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவருவதற்கும், அவற்றை உடனடியாகத் தீர்ப்பதற்கும் வகை செய்யும் முறையில் விவசாய அமைச்சர் தலைமையில், விவசாயிகளது பிரதி நிதிகள், வல்லுநர்கள் கொண்ட விவசாயிகள் நலக் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதனை யொட்டி மாவட்டங்களிலும் இத்தகைய விவசாயிகள் நலக் குழுக்கள் அமைக்கப்படும்.

விவசாயிகளின் கடன் சுமையைப் பற்றி, அதிலும் குறிப்பாக சிறு விவசாயிகளின் கடன் சுமையைப் பற்றி எனது அரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. உயர்ந்து வரும் உற்பத்திச் செலவு கள், விளைபொருள்களுக்கான நியாயமான விலைகள் நிர்ணயித்தல் போன்ற விவசாயிகளின் பிரச்னைகளைப் பற்றி அரசு நன்கு அறிந்துள்ளது ; மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அவர்களது பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வு காணுவதில் எனது அரசு முழு முயற்சி யுடன் ஈடுபடும். சிறு விவசாயிகள் கடன் சுமை யிலிருந்து நிவாரணம் பெறுவதற்கான முறைகளை அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது. அத்தகைய நிவாரணம் அளிக்கப்பட்டு, வருங்காலத்தில் அவர்களுக்கு இத்தகைய சிக்கல்கள் மீண்டும் ஏற்படா வண்ணம் நிதி வழங்கும் முறைகள், தக்கவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பது அரசின் குறிக்கோள் ; நிதித் தேவை மிகுந்துள்ள இதனை, 'மாநில அரசு செயல்படுத்த மத்திய அரசின் உதவி இன்றியமையாததாகும். மாநில அரசு இது பற்றி விடுத்துள்ள நியாயமான வேண்டு கோளுக்கு மத்திய அரசு முழுப் பரிவுடன் உதவி செய்ய முன்வரும் என்று நம்புகிறேன்.

வேளாண்மை விளைபொருட்களை விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை விரிவுபடுத்தும் திட்ட மொன்றையும் அரசு தீட்டியுள்ளது ; உலக வங்கி உதவி பெறுவதற்காக அரசு அதனை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்தகைய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிர்வகிக்கும் மாவட்ட விற்பனைக் குழுக்களைச் சீரமைப்பதற்கான சட்ட வரைவு இந்தக் கூட்டத் தொடரில் அவைமுன் கொண்டுவரப்படும். திருத்தப்பட்ட சட்ட அடிப்படையில், விரைவில் இந்த அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்படும்.

கூட்டுறவு நிறுவனங்களைச் சீரமைப்பதற்கான சட்டத் திருத்தங்கள் செய்வதற்கு, அரசு, சட்ட வரைவு ஒன்றை சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரில் மன்றத்தின் முன் வைத்தது. அது கூட்டுக் குழுவின் ஆய்வில் இருந்தபொழுது சட்டமன்றம் கலைக்கப் பட்டுவிட்டது. அரசு மீண்டும் அந்தச் சட்ட வரைவினை சட்ட மன்றத்தில் கொணர்ந்து அதனைச்

சட்டமாக்குவதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்களுக்கு தேர்தல்கள் விரைவில் நடத்த முடிவு செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

அண்டை மாநிலங்களுடன் சுமுகமான முறையில் கலந்து பேசி பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் இந்த அரசு என்றுமே நம்பிக்கை கொண்டு செயலாற்றி வருகின்றது. உபரியாகவுள்ள மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்வதிலும் ஆற்று நீரைப் பயன்படுத்திக்கொள்வதிலும் அரசு தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி, இணக்கமான முடிவு களைக் காண முடியுமென்று நம்புகின்றது. இருந்து வரும் நதி நீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு விரைந்து மேற்கொள்ளு மென்று குறிப்பிட விரும்புகின்றேன். காவிரி நீர் பங்கீடு பற்றிய பேச்சு வார்த்தைகள் மீண்டும் துவங்கப்படும். தமிழகத்துக்குப் பாதகம் இல்லாமல் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த அரசும் கேரள அரசும் செய்துகொண்டுள்ள ''மின்சாரம்-அலுமினியம்'' எனும் பண்டமாற்று ஒப்பந்தத்தை நிறைவேற்ற மைய அரசு உதவிட வேண்டுமென்று கோருகிறேன்.

வேலை வாய்ப்புகளைத் தருவதில் வேளாண் மைக்கு அடுத்த முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள கைத்தறித் துறை மேம்பாட்டிற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வந்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு மூலதன மாகச் சென்ற மூன்று ஆண்டுகளில் 5.77 கோடி ரூபாய் அரசு அளித்துள்ளது. 1975-76ஆம் ஆண்டில் 17 கோடி ரூபாயாக இருந்த கோ-ஆப்டெக்ஸ் விற்பனை அளவு, 1979-80ஆம் ஆண்டில் 36 கோடி ரூபா யாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பல்வேறு கூட்டுறவு கைத்தறிச் சங்கங்களில் தற்போது தேங்கி இருக்கின்ற துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் வாங்குவதற் காக வழிவகை முன்பணமாக 5 கோடி ரூபாய் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகள் 1975ஆம் ஆண்டு இறுதியில் 2.07 இலட்சம் கதிர்களுடன் இயங்கி, மாதம் ஒன்றுக்கு 4,000 பேல் நூல் உற்பத்தி செய்து வந்தன. அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, 1979ஆம் ஆண்டு இறுதியில் 3·14 இலட்சம் கதிர்களுடன் 7,000 பேல் உற்பத்தி செய்யும் திறனை அடைந்து எல்லாக் கூட்டுறவு அமைப்பின் கீழ் வரும் கைத்தறி களுக்குத் தேவையான நூல் கிடைக்கும் அளவிற்கு இவை மூலம் நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்பு கின்றேன். நெசவாளர்களுக்கு நியாய விலையில் உரிய நேரத்தில் நூல் கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், அரசு தொடர்ந்து மேலும் முனைப்பாக மேற்கொள்ளும்.

1969ஆம் ஆண்டு இறுதியில் மத்திய அரசு பல்வேறு மாநிலங்களில் செய்த மொத்த முதலீடான 3,463 கோடி ரூபாயில், தமிழ் நாட்டில் செய்யப்பட்ட முதலீடு 262 கோடி ரூபாயாக, அதாவது சுமார் 8 சதவீதமாக இருந்தது. 1979ஆம் நிதி ஆண்டு முடிவு வரையிலான மொத்த முதலீடான 15,668 கோடி ரூபாயில், தமிழ் நாட்டில் செய்யப்பட்ட முதலீடு 616 கோடி ரூபாயாக அதாவது 4 சதவீத மாகக் குறைந்துவிட்டது. வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களின் சதவிகிதம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், அதிகமான அளவில் இருந்து வருவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். மத்திய அரசு இவ்வாறு தமிழ் நாட்டில் பெருந் தொழில்களைத்

தொடங்காததன் விளைவாகவும் புதிய பெருந் தொழில்களுக்கு அனுமதி அளிக்கத் தாமதிப்பதன் காரணமாகவும் வேலையற்றோர் எண்ணிக்கையும் தமிழ் நாட்டில் மிக அதிகமான நிலையிலே இருந்து வருகின்றது. இவற்றைத் தீர்ப்பதற்காக மாநில அரசு தனது பொறுப்பிலுள்ள வேளாண்மை, சிறு தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், சிறு தொழில்களுக்கு உறுதுணையாக அமையும் முறையிலும், மத்திய அரசு பெரிய தொழில்களை நிறுவுவதன் மூலம் தமிழ் நாட்டில் தனது முதலீடுகளை விரைந்து அதிகப்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். மொத்த முதலீட்டின் 4 சதவீதமாகக் குன்றிய நிலையிலுள்ள இந்தக் குறைபாட்டைக் களையும் வகையிலும் மத்திய அரசு செய்யும் முதலீடுகள் அமைய வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

கோவை நகரிலும் திருச்சியிலும் புதிய பல்கலைக் கழகங்கள் நிறுவ இந்த அரசு எல்லா முயற்சிகளும் எடுத்து வந்துள்ளதை இந்த மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இவற்றை நிறுவுவதற்கு பல்கலைக் கழக ஆணைக் குழுவின் ஒப்புதலை அரசு பெற்றுள்ளது. இந்த இரண்டு பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்கான சட்டவரைவு இந்த மன்றத்தின் ஒப்புதலுக்காக கொண்டுவரப்படும்; வெகு விரைவில் இந்த இரு பல்கலைக் கழகங்கள் செயல்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் விளைவாக, பட்டப் படிப்பு, உயர்மட்டக் கல்வி ஆகியவற்றின் தரம் மேம்பாடு அடைவதுடன், பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளும் விரைவுபடுத்தப்படும் என்று நம்புகிறேன். சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தைச் சீரமைப்பதற்காகச் சட்டவரைவு ஒன்றும் இந்த மன்றத்தின் முன் கொண்டுவரப்படும். காரைக்குடியில் உள்ள கல்விக் கூடங்களை இணைத்து பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். மேலும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் உவகையுடன் வரவேற்பர் என நம்புகிறேன்.

வளர்ந்து வரும் அறிவியல் ஆய்வுகளின் துணைகொண்டு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், நடைபெற்றுவரும் தொழில்களைச் செம்மைப்படுத்துவதற்கும், புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும் தக்க ஆய்வுகள் நடைபெறுவதற்கும், பல்வேறு நாடுகளில் தொடரப்பட்டுள்ள ஆய்வுகளின் முடிவுகளை அறிந்து செயல்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் ஆய்வு நிலையம் (Centre for Appropriate Technology) ஒன்றைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. தொழில் வல்லுநர்கள், அறிவியல் விற்பன்னர்கள் போன்றோர் அடங்கிய அமைப்பாக இதனை உருவாக்கித் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் புதுமையான செயல்முறைகளை உருவாக்குவதற்கு அரசு ஊக்கமளிக்கும்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதைச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

சென்ற எனது உரையில் குறிப்பிட்டுள்ளபடி, 18 வயது வந்தோர் அனைவரும் உள்ளாட்சி நிறுவனத் தேர்தல்களில் வாக்களிக்க வகை செய்வதற்கான சட்டத் திருத்தம் இந்தக் கூட்டத் தொடரில் அவையின் முன் கொண்டு வரப்படும். இதனையொட்டி புதிய வாக்காளர் பட்டியல்கள் தயாரித்து, அவற்றின் அடிப்படையில் ஆறு மாதங்களுக்குள் எல்லா ஊராட்சி நிறுவனங்களுக்கும்,

நகராட்சி, மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அரசு விரைவில் செயல்படுத்தும்.

முறைப்படுத்தப்பட்ட தொழில்களில் (Organised sector) பணிபுரியும் தொழிலாளர் மேம்பாட்டுக்காக பல்வேறு சட்ட வரைவுகள் இந்த அவையின் ஒப்புதலுக்காக, வரும் கூட்டத் தொடரில் வர இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு இடங்களில், முறைப்படுத்தப்படாத தொழில்களில் (Unorganised Sector) வேலை செய்துவரும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு உரிமைகள் பலவற்றைச்



செய்து கொடுப்பதற்கான சட்டம் ஒன்றும் அவை முன் ஒப்புதலுக்காகக் கொண்டு வரப்படும். இந்த முயற்சிகளுக்கு அவை தனது ஒத்துழைப்பை நல்கி உறுதுணையாகச் செயல்படுமென்று நம்புகின்றேன்.

என் அரசின் கொள்கைகள் ஒரு சிலவற்றை மட்டுமே நான் கோடிட்டுக் காட்டியுள்ளேன். விழிப்போடுள்ள மக்களுக்குத் துடிப்போடு செயலாற்றும் அரசும், மன்ற உறுப்பினர்களும், வறியோரின் துயர் துடைக்கவும், எளியோரின் வாழ்வு உயரவும் பாடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இம்மன்றம் தனக்கே உரித்தான சிறப்புகளை உருவாக்கி நல்ல மரபுகள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளது. அவைகளுக்கு மேலும் சிறப்புகளைச் சேர்ப்பீர்கள் என்று நம்புகிறேன்.

தேர்தல் களம் முடிந்து கூடுகின்ற முதல் கூட்டம் இது; கசப்பான நிகழ்ச்சிகள் ஏதேனும் இருந்திருக்குமாயின் மறந்திடுங்கள்! வாள் போன்ற கூர்மையான வார்த்தைகளைவிட வைரம் போன்ற ஒளி வீசும் வாதங்களே சிறந்தவையாகும்! மக்களாட்சி முறைக்கு அரண்களாக, உங்கள் வாதங்கள் இருக்கட்டும்! உங்கள் திறமை நாட்டின் வறுமையை விரட்ட உதவட்டும்! உங்களை நம்பியுள்ள நாட்டு மக்களுக்கு ஒளி விளக்காக நீங்கள் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என்ற என் தணியாத ஆவலைத் தெரிவித்துக் கொண்டு, உங்களனைவரையும் வாழ்த்தி, என் உரையை முடிக்கின்றேன்.

வணக்கம்.

**(21.6.'80 அன்று தமிழ்நாடு சட்டமன்றக்கூட்டவையில் மேதகு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் ஆற்றிய உரை.)**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர்.
அவர்கள், 19-6-'80 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
யின் உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

# மத்திய மாநில உறவு

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வானொலிக்கு அளித்த சிறப்புப் பேட்டி இங்கே இடம் பெறுகிறது. இப்பேட்டி 16-6-1980 இரவு 8.30 மணிக்கு வானொலியில் ஒலிபரப்பாகியது. மாண்புமிகு முதல்வர் அவர்களை வானொலியின் சார்பாக பேட்டி கண்டவர் சென்னை வானொலி நிலையத்தின் தலைமை நிருபர் : திரு எ. கருப்பசாமி அவர்கள். நிகழ்ச்சியைத் தொகுத்துத் தயாரித்து அளித்தவர்: வானொலி செய்தி ஆசிரியர் திரு மு.குழந்தைவேலு அவர்கள்.

நிருபர் :

முதலமைச்சர் அவர்களே! தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் நல் வாழ்விற்கும் தங்கள் தலைமையிலான அரசு மேற்கொள்ள விருக்கும் திட்டங்கள், கொள்கைகள் பற்றித் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் :

வானொலி நிலையத்தாருக்கு நான் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுக்குத் தெரியவேண்டிய அத்தியாவசியமான திட்டங்கள் பற்றியும், விவரங்களைப் பற்றியும் நான் தெரிவிப்பதற்குரிய வாய்ப்பினைத் தந்ததற்கு வானொலி நிலையத்தினருக்கு நான் நன்றி கூறுவது பொருத்தமானது என்பது என் கருத்தாகும்.

மக்களுடைய தேவைகள் மிக அதிகம். திட்டங்களும் அதற்கேற்ப விரிவாக இருந்துவரும். தமிழகத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் ஆண்டுக்கு இத்தனை என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுத்து, தன்னிறைவு உழைப்புத் திட்டம் என்ற தலைப்பில், குடிநீர், வேலை வாய்ப்பு, பாசனவசதி, கல்வி, மருத்துவம், போக்குவரத்து, பாதை வசதி, வீடு, விளக்கு போன்றவைகளைப் பெறுமாறு செய்வது. 1979-80-ம் ஆண்டு இந்தத் திட்டத்தை ஏறத்தாழ 70 பஞ்சாயத்து யூனியன்களில் பரீட்சார்த்த முறையில் நடைமுறைப்படுத்த நான் உத்தரவிட்டேன். அதை இப்போது பரிசீலித்து, குறை நிறைகளை அறிந்து, குறைகளைக் களைந்து,

# மாண்புமிகு முதல்வர் சிறப்புப் பேட்டி

மேலும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி மூன்று, நான்கு ஆண்டுகளில் தமிழகம் முழுவதிலுமுள்ள 376 பஞ்சாயத்து யூனியன்களில் அதை நிறைவேற்ற முயல்வோம். அதே நேரத்தில் மின்சார உற்பத்தி, பெருந் தொழில்கள், நகரங்களின் வளர்ச்சி முதலியவற்றிற்கும் இவை போன்ற திட்டங்களை நாங்கள் உருவாக்கி எவ்வளவு விரைவாக நிறைவேற்ற முடியுமோ அந்தப் பணியை நாங்கள் செய்வோம்.

**நிருபர் :**

முந்தைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் மதுவிலக்குக் கொள்கையில், தற்போது மாற்றம் எதுவும் இருக்குமா?

**மாண்புமிகு முதல்வர் :**

மதுவிலக்குத் திட்டத்தை, நான் முதலில் கடுமையாக்கிய போது, குற்றம் செய்தவர்கள் தப்பித்துக்கொள்வது, குற்றம் செய்பவர்களைத் தூண்டிவிட்டு, அவர்களைப் பயன்படுத்திக் குற்றம் இழைப்பவர்கள் பயன்பெறுவது, இப்படிப் பட்ட நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால், நிரபராதிகள் தண்டிக்கப்படுவதும், குற்றம் அற்றவர்கள் பழிக்கு ஆளாவதும் என்கிற நிலைமை தோன்றிய பிறகு அதைமாற்றி அமைக்கவும், நிரபராதிகள் இந்தக் கொடுமையில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வாய்ப்பு அளிப்பதற்காகத்தான் 25 ரூபாயில் எல்லோருக்கும் அனுமதி என்கிற அளவில், அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தேனே தவிர, மதுவிலக்கை அடியோடு கைவிட்டு விட வேண்டும் என்கிற நோக்கத்தில் அல்ல என்பதை மட்டும் இப்பொழுது நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

சட்டமன்றத்தில் சொல்லவேண்டிய கொள்கை விளக்கத்தை இப்பொழுது நான் சொல்லமுடியாத கட்டாய நிலையில் இருப்பதால் நான் சட்டமன்றத்தில் இதைப்பற்றி மிகத் தெளிவாகக் கொள்கை விளக்கம் தருவேன் என்பதை இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன்.

**நிருபர் :**

தமிழ்நாட்டரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையேயான உறவுகள் எவ்வாறு இருக்கும்? மத்திய அரசிடம் தாங்கள் எதிர்பார்ப்பதென்ன?

**மாண்புமிகு முதல்வர் :**

1967ல் இருந்து மத்தியில் ஒரு கட்சியும் தமிழகத்தில் வேறு ஒரு கட்சியும்தான் ஆண்டு வருகின்றன. மாறுபட்டுள்ள நிலைமை எதுவும் இப்பொழுது தமிழகத்தில் புதிதாகத் தோன்றிவிடவில்லை. மத்தியிலும் அப்படித்தான்.

எனவே மத்திய, மாநில அரசுக்கிடையில் உறவு சுமுகமாகவே இருக்கும் என்பதும், மத்திய அரசுக்கு அனைத்து மாநில மக்களும் நலமடைய வேண்டும் என்பதுதான் அடிப்படைக் கொள்கையென்றும் நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகவே தமிழகத்தின் நலனுக்கு ஏற்ப, எங்களின் திட்டங்களை நிறைவேற்ற எங்களுடைய கடமையை நாங்கள் செய்யும் போது, மத்திய அரசுக்குள்ள மாபெரும் கடமை எங்களுக்கு உதவியாக அமைந்து, சுமுகமாக உறவு தொடரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அனைத்து மாநிலங்களிலுள்ள மக்களும் நல்ல சூழ்நிலைக்கு, சுற்றுச் சார்புக்கு, ஏற்ப வளமாக வாழக்கூடிய நிலைமையைப் பெறுவதும், அதையொட்டி அவர்கள் நல்வாழ்வைப் பலமாக்க நினைக்கும்போது ஒரு மாநிலத்துக்கு அதிக வாய்ப்பும், இன்னொரு மாநிலத்துக்கு வாய்ப்புக் குறைவும் என்ற நிலமை ஏற்பட அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பது நமக்குத் தெரிந்த உண்மை என்கிற வகையிலும், தாழ்ந்துபட்டிருக்கின்ற மாநிலங்கள் மேலும் வளருவதற்கும் உயர்ந்துவிட்ட மாநிலங்களுடைய உரிமைகள் பாதுகாப்பதற்கான திட்டங்களைத் தீட்டி அவர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்பிக்கை நான் சொல்லும்போது, மத்திய மாநில அரசு உறவு என்ற வகையில், மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் உறவு சீராக—சுமுகமாக இருக்கும் என்று நான் மனத்தெளிவுடன்-மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய வாய்ப்புத் தந்ததற்காக நான் மேலும் கடமைப்பட்டவன் என்று சொல்லுவதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

**நிருபர் :**

பல்வேறு அலுவல்களுக்கிடையேயும் எங்களுக்கு நேரம் ஒதுக்கி, அரசின் திட்டங்கள் பற்றியும், நோக்கங்கள் பற்றியும் விளக்கியதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

**(நன்றி : சென்னை வானொலி)**

# கறை இலா அரசு

நல்லறி வுடைய மக்கள்
நன்றியில் தேர்ந்த மக்கள்
கல்லிலும் தண்ணீர் காணும்
கலைத்திறம் மிகுத்த மக்கள்
இல்லையென் னாமல் நல்கும்
இருகரம் தமக்கே தங்கள்
சொல்லினைக் கொடுத்தார்; வெற்றி
சுடரொளி வீசச் செய்தார்!

கற்றவ ரேனும் அன்றி
கல்வியில் லாதா ரேனும்
முற்றிய தெய்வக் கொள்கை
முகிழ்த்தவர் ஆத லாலே
வெற்றியை நல்லோர்க் கீந்தார்
வியத்தகும் அரசைக் காண
சுற்றிலும் எழுந்தே நின்றார்
தூயவர் வாழ்க! வாழ்க!

கள்ளமில் லாத உள்ளம்
களங்கமில் லாத கைகள்
தெள்ளிய அறிவின் மேன்மை
தேர்ந்தவர் தலைவர் அன்னார்
புள்ளியை மீறா தாரே
புத்தவை தன்னில் வந்தார்;
முள்ளிலா மலர்கள் தம்மை
மோகனக் கண்ணன் காக்க!

பொதுப்பணம் வீணா காது
பொய்மையும் இடம்பெ றாது
புதுப்புதுத் திட்டம் என்று
பூமிக்கு நன்மை செய்து
கதியிலா ஏழைக் கெல்லாம்
கலங்கரை விளக்கம் ஆகி
அதிசயம் நிகழ்த்தப் போகும்
அரசினை வாழ்த்து வோமே!

**அரசுக் கவிஞர்**
**கண்ணதாசன்**



## பெருந்தலைவர் வாழ்க்கை ஏட்டில் சில காட்சிகள்





# 1962-ஆம் வருடம்!

நான் மாநகராட்சிக் கவுன்சிலர் ஆகி ஏறத்தாழ ஒன்றரை வருடங்கள் ஆகியிருக்கும். அப்போதெல்லாம் பெருந்தலைவருடன் எனக்குப் பழக்கம் உண்டு, என்றாலும் அவரது இறுதிக் காலத்தில் ஏற்பட்டிருந்த அளவுக்கு அவ்வளவு நெருக்கமான பழக்கம் இல்லை.

கோடை விடுமுறைக்குப் பின்னர் பள்ளிகளும், கல்லூரிகளும் திறந்து அட்மிஷன் சீசன் ஜரூராக நடந்து கொண்டிருக்கிறது.

எனது டிவிஷனில்-எனது குடும்பத்திற்கு நெடுங்காலமாகப் பணியாற்றி வருகிற சலவைத் தொழிலாளி ஒருவர்; அவரது இரண்டாவது மகன் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்திருந்தான்.

ஒரு நாள் அந்தத் தொழிலாளி என்னிடம் வந்தார்.

"டாக்டரய்யா நினைச்சா எனக்கு இந்த உபகாரம் செய்ய முடியும். ஐயா சொன்னா, முதலமைச்சர் தட்டமாட்டாருன்னு எல்லாரும் ஒரே மாதிரியாச் சொல்றாங்க" என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார்.

இவரது இரண்டாவது மகன், 'ரேடியோ கிராஃபர்' பயிற்சிக்கு மனுப் போட்டிருக்கிறான். முதலமைச்சர் காமராஜரிடம் நான் போய் சொன்னால் கண்டிப்பாக இடம் கிடைத்து விடுமாம். அந்த ஏழைத் தொழிலாளிக்கு என்மீது அவ்வளவு நம்பிக்கை, மரியாதை.

மறுநாள் காலை...திருமலைப் பிள்ளை சாலையிலுள்ள தலைவரின் இல்லத்திற்கு அவரைஅழைத்துக் கொண்டு போனேன்.

அப்போது தலைவர்-கட்டிலில் அமர்ந்து காலைப் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டிருக்கிறார். உள்ளே நுழைந்தோம்.

"என்..ன..எங்க வந்தீங்க..... இவ்வளவு அதிகாலையிலே! அவுங்க யாரு.....?" தலைவர் கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாய் அடுக்கினார்.

"ஒண்ணுமில்லீங்க...... இவரு நம்ப டிவிஷனிலே ரொம்ப நாளா லாண்டரிக் கடை நடத்தறாரு....எங்க குடும்பத்துக்கும் ரொம்ப வேண்டியவருங்க......"

"சரி...சரி..என்ன பண்ணனும் சொல்லுங்க....."



## நினைக்க நினைக்க நெஞ்சம் உருகும்...

**டாக்டர் கே. சௌரிராஜன் எம். எல். ஏ.**

"இவரோட இரண்டாவது மகன் இந்த வருஷம் எஸ். எஸ். எல். சி., பாஸ் பண்ணிட்டானுங்க..."

"ரொம்ப சந்தோஷம், ரொம்ப சந்தோஷம்!"

"ரேடியோ கிராஃபர் வேலைக்கு அப்ளிகேஷன்போட்டிருக்கான்"..நான் முடிக்கவில்லை.. இதுவரையில் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த தலைவர் குறுக்கிட்டு—,

"புத்தியிருக்காண்ணேன் . . . நாளைக்கு மறுநாள் அதுக்கு லிஸ்ட் வெளியிடப் போறாங்க... இன்னிக்கு வந்து சொன்னா எப்படி? அது மொத்தமே இரண்டு ஆஸ்பத்திரியிலேயும் சேர்ந்தே பதினைந்தோ பதினெட்டோ தான் மொத்தசீட்டே இருக்கு.." என்றார் தலைவர்.

"பையன் பேக்வர்ட் கிளாஸைச் சேர்ந்தவன்"—இது நான்.

"அது சரிதாம்பா...பேக்வர்ட் கிளாஸ்லேயும் இன்னும் அதிக மார்க் வாங்கின பிள்ளைக மனுப் போட்டிருப்பாங்களா இல்லியா.. பேக்வர்ட் கிளாஸ் இடம்னா அது என்ன உனக்காகக் காத்துக் கிட்டு கிடக்குதா என்ன....?" என்று கூறினார் தலைவர்.

நான் மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்து நின்றேன். அதற்குள்..

"சரி..சரி..வேறே ஏதாவது ஒரு சமயம் பார்க்கலாம்......" என்று முடித்து விட்டார் தலைவர்.

அந்த ஏழைத் தொழிலாளியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன். அவரது கண்களில் கண்ணீர் அரும்பிக் கொண்டிருந்தது.

"டாக்டரய்யா நெனைச்சா எனக்கு இந்த உபகாரம் செய்ய முடியும்..ஐயா சொன்னா முதலமைச்சர் தட்டமாட்டாருன்னு எல்லாரும் ஒரே மாதிரியாச் சொல்றாங்க..." என்று என் மீது எவ்வளவு நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருக்கிறார் அவர்! இருபத்தினான்கு மணி நேரத்திற்குள் அவரது அந்த நம்பிக்கை இப்படி அவர் எதிரிலேயே தூள்தூளாவதை அவரால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்!

ஏழை எளிய மக்கள்-பிற்படுத்தப்பட்டவர்கள் - சமூகத்தின் அடித்தட்டில் ஆதிக்கச் சக்திகளின் கால்களுக்குக் கீழ், காலகாலமாய் நசுக்கப்பட்டு, நலிந்து கிடக்கும் மக்கள்- ஆகியோரிடம் தலைவருக்கு உள்ள பற்றும் பாசமும், அவர்களுக்காகத் தம்மால் முடிந்ததை எல்லாம் செய்ய வேண்டும் என்ற அவரது உறுதியையும் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அந்த நம்பிக்கையில் தான் இந்தத் தோழரை நான் தலைவரிடம் அழைத்து வந்தேன்.

எனினும் நான் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. நான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் சொன்னேன்.

"ஐயா...நீங்க எப்படி நினைச்சாலும் சரிங்க..இவருக்குஇரண்டு பிள்ளைங்க. மூத்தவன் மூணாவது பாரத்தையே தாண்ட முடியாமல் படிப்பை விட்டு விட்டு அப்பாவோடு அழுக்கு மூட்டையைச் சுமந்து கொண்டு அலைகிறான். இந்தப் பையன் எப்படியோ நன்றாகப் படித்து எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்துவிட்டான். இவனையாவது வேறு தொழிலில் ஈடுபடுத்தலாம்னு அவுரு கொள்ளை ஆசையோடெ உங்ககிட்டே வந்தாரு...நீங்களும் முடியாதுன்னு சொல்லிட்டா..... அவரு இனிமேல் எங்கேபோவாரு? இரண்டாவது பையன் தலையெழுத்தும்-அப்பன் தொழில் தான் என்று மனசு உடைஞ்சி போயிடப் போறாரு..அவ்வளவு தானே"-என்றேன்.

உணர்ச்சி வசப்பட்டுப் படபடவென்று இப்படிக் கூறிவிட்டேன் நான்.

தலைவர் கூர்ந்து என்னைப் பார்த்தபடியே கேட்டுக் கொண்டிருந்தார். மாறி மாறி என்னையும், அந்தத் தொழிலாளியையும் ஓரிரு வினாடிகள் பார்த்தார்.

"கிருஷ்ணய்யா......" என்று அழைத்தார்.

"இந்தச் சவுரி என்னமோ சொல்றாரு பாருங்க......இதைக்

# பார்த்தோம்! படித்தோம்!

**போற்றத்தக்கது !**

'தமிழரசு' மிகச்சிறந்த முறையில் – வரவர போற்றத்தக்கதாக வெளிவருகின்றது. கட்டுரைகளையும், செய்திகளையும் படிக்க மிகவும் மகிழ்கிறேன்.

ரெ. சண்முகம் பிள்ளை,
(ஓய்வு பெற்ற மாவட்டப் பதிவாளர்),
தஞ்சாவூர்-1.

**அரிய மலர் !**

'தமிழரசு' 16-6-80 இதழ், நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் முழு விவரங்கள் உள்ளடக்கிய அரிய மலராகத் திகழ்கிறது.

**டி. சுவாமிநாதன்,**
பெரணாம்பட்டு.

**கோபுரமாக நிற்கிறாள் !**

தேர்வுக்காகத் தன்மீது கெட்ட அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்பவராக வரும் சுமித்திராவைவிடக் கோகிலா கோபுரமாக உயர்ந்து நிற்கிறாள் — 'வராத தட்சணை' கதையில் !

– ராஜாமணி கிருஷ்ணசாமி
சேக்கவுண்டன்
செட்டிபபாளையம்,
கோவை.

**படம் போடலாம் !**

*16.6.80 'தமிழரசு அட்டைப் படம் வெகு ஜோர். முதல்வர் அவர்களின் வண்ணப்படத்தைக் கண்ணாடி போட்டு மாட்டலாம் போலிருக்கிறது.*

**ஜி. சுப்ரமணி,**
**எஸ். ருக்மணி,**
**சென்னை-82.**

**தேவை–படக்கதை !**

முன்பு தமிழரசில் சிறுவர் படக் கதை வெளியிட்டீர்கள். மீண்டும் அதுபோல வெளியிட வேண்டும்.

இளங்கோ,
ஐயாறு, தஞ்சை.

**புதுக் கவிதை வேண்டும் !**

புதுக் கவிதைகளுக்கும், புதுக் கவிஞர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டுகிறேன்.

– ரசிகன்,
ஊற்றங்கரை.

**சிறப்பாக இருந்தது !**

இந்திய மொழிகள் நிறுவனம் பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது. 'பலி ஆடு' சிறுவர் கதையும், 'வராத தட்சணை' சிறு கதையும் சிறப்பாக இருந்தது.

வி. சூடாமணி
திருப்பைஞ்ஞீலி, திருச்சி.

**கருவூலம் !**

சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகள் கொண்ட 'தமிழரசு' இதழ் கண்டேன். வண்ணமுகப்பு, பதவியேற்பு நிகழ்ச்சிகள், கண்களைக் கவர்ந்தன. போற்றிப் பாதுகாக்க வேண்டிய கருவூலம் அது!

**– கருமாரிதாசன்,**
**சென்னை-40.**

**பாட நூல்களில்....**

மாணவர் பக்கத்தில் வெளிவந்த 'அம்மா', 'மலர்கள்' ஆகிய பாடல்கள் பள்ளிப் பாடநூல்களில் இடம் பெறத் தக்கவை.

–ஆர். ஜனார்த்தனம்
கண்டனூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

---

குறிச்சு வெச்சுங்குங்க...வெயிட்டிங் லிஸ்டிலே பிரியாரிட்டி வருகிறாப்போல ஏற்பாடு பண்ணி இவங்க.?.செலக்ஷன் ஆனப்பயாரும் வரலைன்னா.....இந்தப் பையனை எடுக்க முடியுமான்னு பாருங்க..'' என்றார். அவரது குரலில் தொனித்த நெகிழ்ச்சியும் உருக்கமும் ''அட நாம் அவர் மனம் வருந்தும்படி எதுவும் கூறி விட்டோமோ..'' என்று என்னைத் திகைக்க வைத்துவிட்டன. ஆனால், காரணம் அதுவல்ல என்று பின்னர் அவரோடு நெருங்கிப்பழகிய காலங்களில் ஏற்பட்ட அனுபவத்தால் அறிந்து கொண்டேன்.

ஏழை-எளிய பாட்டாளிமக்கள்-பிற்படுத்தப்பட்டவர்கள், அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர்களிடம் அவருக்குத் தனியானதொரு பரிவும்-அவர்களை முன்னேறச் செய்ய வேண்டும் என்று அளப்பரிய ஆசையும் இருந்தது. அதனாலேதான் அந்த ஏழைத் தொழிலாளியின் குலத்தொழிலை இணைத்து நான்-அவருடைய ஆசையை வெளியிட்டதும் தலைவர் மனம் நெகிழ்ந்துவிட்டார்.

அந்தப் பையனுக்கு அதிர்ஷ்டமும் இருந்ததைச் சில நாட்களில் தெரிந்து கொள்ள முடிந்தது. செலக்ஷன் ஆன பையன்களில் இரண்டுபேர் என்ன காரணத்தினாலோ வரவில்லை. பையனுக்கு இடம் கிடைத்துவிட்டது!

அதற்கப்புறம் அந்தத் தொழிலாளி என்னைப் பார்க்கும் போதெல்லாம்—

''நான் அப்பவே சொன்னேனே ஐயா சொன்னா காமராஜர் தட்ட மாட்டாருன்னு......நான் சொன்னது பலிச்சிட்டுது பார்த்தீங்களா!'' என்று சொல்லிச் சொல்லி சந்தோஷமும் பெருமையும் கொள்வார்.

கடந்த ஆறேழு வருடங்களில்-தலைவருக்கு வைத்தியம் பார்க்கும் பெரும்பேறு கிட்டப்பெற்று, 'அது சாப்பிடக்கூடாது...இதை அறவே விட்டுவிட வேண்டும். இந்த மருந்தைத் தவறாமல் சாப்பிட வேண்டும்'' என்று தலைவரிடம் டாக்டருக்குரிய கண்டிப்போடு சொல்ல நேரும்போதெல்லாம் அந்தத் தொழிலாளி சொன்ன—

''ஐயா...சொன்னா தட்ட மாட்டாரு....'' என்ற வார்த்தைகள் நினைவுக்கு வரும்.... என்னையறியாமல் கண்கள் கலங்கும். மனத்தைச் சோகம்... கவ்வும்.... எனினும், தலைவருக்குச் சேவை செய்யக்கிடைத்த அந்த வாய்ப்பை எண்ணி மனத்தைத் தேற்றிக் கொள்வேன்.

இப்போது தினசரி இரவு 8.30 மணிக்கு டிஸ்பென்சரிமுடிந்ததும் நண்பர்களுடன் காரில் மெரீனா பீச்சுக்குப்போகும்போது..கடந்த காலத்தில் இந்த நேரங்களில் தலைவருடன் இருந்து உரையாடிய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய் மனத் திரையில் விரிந்து-அலைமோதும்.......ஒன்றா இரண்டா....நினைக்க நினைக்க நெஞ்சம் உருகும்!

# ஓ! அந்தக் கடைசி நிமிடங்கள்!

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற இராமலிங்க அடிகளாரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்; கண்டதில்லை. - ஆனால்-எண்ணெய் காணாமல் வறண்ட தலையோடு தென்பட்ட வறிய குடும்பத்துச் சிறுவர்களைக் கண்டு கண்கலங்கி நின்ற கர்மவீரர் காமராசரை? கண்டிருக்கிறோம். 'பச்சைத் தமிழர்' எனப்பட்ட அவர்தம் எளிய தமிழைக் கேட்டிருக்கிறோம். அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த பெரும்பேறேகூடப் பெற்றிருக்கிறோம்.

'கடை விரித்தேன், கொள்வாரில்லை' என்ற அந்த இராமலிங்கரின் கலக்கத்திற்கு, ஒருபோதும் காமராசர் ஆட்பட்டதில்லை. அவர் விரித்த கடையில் அணி செய்தவைகள் - பெரும்பாலான மக்களாலே விரும்பி ஏற்கப்பட்டன. உண்மை ; வெறும் புகழ்ச்சியில்லை !

எளிமையே உருவானர் அவர்; வீண் ஆர்ப்பாட்டங்கள் அவரால் வெறுக்கப்பட்டன !

கீழ்த்தட்டு மக்களும் புரிந்து கொள்ளும்படி பேசும் சுபாவம் அவருக்கு; கரடுமுரடான தர்பார் வாசகங்கள் எட்டிக்காய்!

உள்ளத்தில் ஒன்று, உதட்டில் ஒன்று என்ற தன்மை அவருக்கு இருந்ததில்லை ; சொன்னதைச் செய்வார்; செய்ய இயலாதவற்றை மறைக்க வார்த்தை ஜாலங்காட்டிடும் கீழ்மட்ட அரசியலுக்கு அவர் விதிவிலக்கு!

பதவி பெரிதல்ல என்று வாழ்ந்து காட்டிய அந்தப் படிக்காத மேதையின் பிறந்தநாள் விழா, தமிழகத்திலே அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்க் கொண்டாடப்படுகிற வேளையிது.

இந்நேரத்தில்-அவர் நம்மை விட்டுப் பிரிந்திட்ட அந்தக் கடைசிநாளின் அபாயகரமான மணித்துளிகளை நினைவு கூர்வோம்!

காந்தியார் பிறந்தநாள் என வையகமே கொண்டாடும் அக்டோபர் 2...1975- ...காமராசரின் மறைந்த நாளாயிற்று! ஓ, அந்த நாள்தான் எத்தனை கொடியது!

டாக்டர் சௌரிராஜன், காமராசரின் தனி மருத்துவர். ஒவ்வொரு நாளும் இரவு 9.20 மணிக்கு வந்து காமராசரின் உடல் நலம் சோதித்து விட்டு, ஏதாவது உலக நடப்புகளைப் பேசிவிட்டுச் செல்வதுஅவர் வழக்கம். அக்டோபர் (1975) முதல் நாள் இரவும் அவ்வாறே வருகை தந்தார் டாக்டர். உடல்நலப் பரிசோதனை முடிந்து, பேச்சு வார்த்தைப் பரிமாற்றம்.

மூன்றாம் தேதியன்று நடைபெறவிருந்த நீதிபதி கைலாசத்தின் அறுபதாமாண்டு நிறைவு விழாவிற்குத் தன்னோடுவருமாறு டாக்டரையும் கேட்டுக் கொண்டான பிறகு படுக்கை. வாடிக்கையான குறட்டைப்பின்னணியோடு காமராசரின் உறக்கம்.

இரண்டாம் தேதி விடிந்தது—

சிற்றுண்டி முடிந்தது. எப்போதும் போல 'இன்சுலேஷன்' ஊசி போட்டுக் கொள்கிறார் காமராசர். சிறிது நேரம் கழித்து, மோர்.

பிற்பகல் ஒன்றரை மணியிருக்கலாம். பாகற்காய் கறி, முளைக்கீரைக் கடையல், பருப்புத் துவையல் ஆகியவற்றோடுமதியஉணவு.

உதவியாளர் வைரவன் பரிமாறுகிறார்.

''வயிறு, சரியாயிருக்கு''-சற்று அதிகமாகவே சாப்பிடுகிறார் காமராசர்.

''என்ன இது, உச்சந்தலையில இப்பிடி வேர்க்குதே?''-துடைத்துக் கொள்கிறார்.

''அதனால ஒண்ணுமில்லிங்கையா, எப்பவும் அதிகமான யோசனை ஒங்களுக்கு; அதான் இப்பிடி வேர்க்குது!''—உதவியாளர் ஒருவரின் ஆதரவான பதில்.

அதுதான் காமராசரின் கடைசிச் சாப்பாடு என்பதை, அவர்கள் நினைத்துக்கூடப் பார்க்காமல் தாயன்போடு பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள் சாப்பாடு முடிந்தது.

காவியணிந்த அந்த மாடி வீட்டின், வாசல்புற வலப்பக்க ஒய்வு அறையிலே வந்து வழக்கம்போல் படுக்கிறார் காமராசர். ''அப்பாடா!''

இரண்டு மணியிருக்கலாம். 'காலிங்பெல்' ஒலிக்க, உதவியாளர் ஓடி வந்து தலைநீட்ட— ''டாக்டர் சௌரிராஜனுக்கு டெலிபோன் போட்டுக் குடு'' என்று கேட்கிறார்.

எங்கெங்கோ முயன்றும் டாக்டர் சௌரிராஜன் கிடைக்கவில்லை. டாக்டர் ஜெயராமன் கிடைக்கிறார். காமராசரோடு பேச வைக்கிறார்கள். 'குபு குபு' வென்று தனக்கு வியர்ப்பதைச் சொல்கிறார் காமராசர்.

''மூச்சுத் திணறுகிறதா? நெஞ்சு வலிக்கிறதா?'' என்றெல்லாம் கேட்கிறார் டாக்டர் ஜெயராமன்.

''அதெல்லாமில்லே; ஒரேயடியா வியர்வைதான்'' என்று பேச்சை முடிக்கிறார் காமராசர். பிறகு உதவியாளரை அழைத்து- ''அந்த ஜெயராமன் வர்றப்ப, பிளட் பிரஷர் பார்க்கிறதையும் எடுத்தாறச்சொல்லு. வெளக்கை நிறுத்திட்டுப் போ!'' என்கிறார். படுக்கிறார்.

டாக்டர் சௌரிராஜனுக்கும் தேடிப் பிடித்துத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. மூன்று மணி சுமாருக்கு, அவர் பறந்தோடி வருகிறார்.

கட்டிலில்-இடது புறம் திரும்பி இரண்டு கைகளையும் தலைக்கு முட்டுக் கொடுத்தபடி படுத்திருக்கிறார் காமராசர். கால்களை மடக்கி வைத்திருக்கிறார். எப்போதும் கேட்கும் குறட்டைச் சப்தம் இல்லாதிருக்கவே, பதறிப் போன டாக்டர், காமராசரின் நாடியைப்பரிசோதிக்கிறார். 'கம்' மென்றிருக்கிறது. கை ஜில்லிட்டிருக்கிறது.

## வேக மொழி!

*மிகவும் வேகமாகப் பேசப்படும் மொழி என்கிற பெருமை பிரஞ்சு மொழிக்கு உண்டு. இதில்—ஒரு நிமிஷத்திற்கு 350 சொற்கள் பேசப்படுகின்றன!*

*ஜப்பான் மொழியில் 310 சொற்களும் ஜெர்மன் மொழியில் 250 சொற்களும், ஆங்கிலத்தில் 220 சொற்களும் ஒரு நிமிஷத்தில் பேசப்படுகின்றன!*

—ச. தீபா

''பெரியவர் போயிட்டாரே!'' என்று அலறி, தன் கையிலிருந்த மருத்துவக் கருவிகளையெல்லாம் வீசியெறிந்து விட்டுத் தரையில் உருள்கிறார் டாக்டர்.

உதவியாளர்களெல்லாம்கதறித் துடிக்கிறார்கள்!

டாக்டர் ஜெயராமன் வந்து சேர்கிறார்.

காமராசரின் இதயத்திற்கே நேரடியாக மருந்தைச் செலுத்த முயல்கிறார். 'முயற்சி திருவினையாக்கும்' என்பது பொய்யாகிறது!

டாக்டர் அண்ணாமலை வருகிறார்.

யார் வந்தாலும் - ''வாங்கய்யா!'' என்று வாயார வரவேற்கும் காமராசரின் மூடிய இமைகள், மீண்டும் இந்த உலக நடப்பைக் காண அதற்குப்பிறகு திறக்கப்படவே இல்லை !

—பி. எல். ராஜேந்திரன்.

# மனவலிமை

கடைசி நாட்களில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு இருந்த வைராக்கிய உணர்வுகளை நினைக்குங்கால் என்னால் அவரை ஒரு பற்றற்ற ஞானியாகத்தான் காண முடிந்தது. சாதாரண ஆசைகளையும் உணர்வுகளையும் கூட வயோதிகப் பருவத்தில் அடக்க முடியாமல் வயோதிகர்கள் அவதிப்படுவதை நான் பார்த்திருக்கிறேன்.

சாப்பாட்டு விஷயங்களில் இருந்து எல்லாக் காரியங்களிலும் தன் ஆசைகளை அடக்கி உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி வெற்றி பெற்ற ஒரு கர்ம வீரராகவே அவர் திகழ்ந்தார். உப்பும், புளிப்பும், காரமும் இல்லாமல் தினமும் சாப்பிட்டு வாழ முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர் அவரே! அவர் உட்கொள்ளும் உணவை ஒரு நாள் கூட யாராலும் உட்கொள்ள முடியாது. தொடர்ந்து சாப்பிட்டால் நமது நாக்கிற்கு ருசி என்ன என்பது கூட மறந்துவிடும். 'வாழ்வதற்குத்தான் உணவு உட்கொள்கிறோமே ஒழிய, உண்பதற்காக உயிர் வாழ்வதில்லை' என்பதற்கு எடுத்துக்காட்டு பெரியவரின் உணவு.

பல காலமாகப் புகை பிடித்துக் கொண்டிருந்த அவர் திடீரென்று ஒரே நாளில் புகை பிடிப்பதை நிறுத்தி விட்டார் என்று கேள்விப்பட்டவுடன் அவரிடம் நான், வேடிக்கையாக ''அது எப்படி தங்களால் முடிந்தது?" என்று கேட்டேன். அதற்கு அவர் அளித்த பதில்: "புகை பிடிப்பதைக் குறைத்துக் கொள்வது நல்லது என்று டாக்டர் சொன்னார்கள். குறைத்துக் கொள்வது ஏன்? அறவே நிறுத்தி விட்டால் போயிற்று என்று நினைத்தேன். அன்றுமுதல் புகை பிடிப்பதில்லை'' என்று சர்வ சாதாரணமாகச் சொன்னார்கள்!

நான் புகை பிடிக்கும் பழக்கம் உடையவன். அந்தப் பழக்கத்தில் இருந்து மீள வேண்டும் என்று பலமுறை நினைப்பேன். இதுவரையில் நிறுத்தவில்லை! இப்படி பல ஆண்டுகள் ஒரு பழக்கம் உடையவர் அந்தப் பழக்கத்தை திடீர் என்று ஒரு நொடியில் நிறுத்த வேண்டும் என்றால் அவருக்கு எவ்வளவு மன வலிமை இருக்க வேண்டும் என்று எண்ணி வியந்தேன். இந்த மன உறுதி, பற்றற்ற தன்மை - துறவிகளுக்குத்தான் உண்டு.

—டாக்டர் சௌரிராஜன், எம். எல். ஏ.



# நான் கண்ட ஒற்றுமை

கிழக்கிந்தியக் கம்பெனியார் 1639ஆம் ஆண்டு கட்டிய செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் இந்தியக் குடியரசின் மூவர்ணக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.

மேற்கு அடிவானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த கதிரவனின் கிரணங்கள் அந்தத் தேசியக் கொடியின் நிழலை உலகப் பிரசித்தி பெற்ற மெரினாச் சாலையில் விழச் செய்த வண்ணம் இருந்தன. வட்டிக் கடைக்காரராக இருப்பதோடு, காண்டிராக்டருமான ஒருவர், கஞ்சத்தனத்தின் காரணமாகக் கார் வைத்துக் கொள்ள விரும்பாத நிலையில், தமிழ் உழைப்பாளி ஒருவர் இழுத்துவந்த ரிக்ஷாவில் ஏறிக்கொண்டு ஒரு காண்டிராக்ட் பற்றி முடிவு செய்யுக் கோட்டைக்கு வந்து கொண்டிருந்தார். அவரை இறக்கிவிட்டு விட்டுக் கொடியின் நிழலுக்கடியில் ஒரு கணம் நின்று, தனது முகத்திலிருக்கும் வியர்வையைத் துடைத்துவிட்டு, தனது பயணத்தின் அடுத்த கட்டத்தைக் கடக்க முற்படுகிறான், அந்த ரிக்ஷா இழுக்கும் தொழிலாளி!

இது கற்பனைதான் என்றாலும் உண்மைக்குப் புறம்பானது அல்ல. முதலமைச்சரைப் பேட்டி காணக் கோரியிருந்தேன். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு என்னை முதலமைச்சரின் அறையில் அனுமதித்தார்கள். அங்குத் தூய வெள்ளைக் கதர் வேஷ்டி உடுத்தி, சட்டை போட்டு, 300 ஆண்டுகளுக்கு முன்பு நவாபுகள் தர்பார் நடத்திக் கொண்டிருந்த இடத்தில் அமர்ந்திருந்தார் அந்த உழைப்பாளியின் பிரதிநிதி. பண்புமிக்க அவர் — மதிப்பிற்குரிய முதல்வர் திரு காமராஜர் அனுபவம் வாய்ந்த விவசாயியாக, உழைப்பாளியாகக் காட்சியளித்தார். இந்திய விடுதலைப் புரட்சி ஏற்பட்டிரா விட்டால் அவர் கலப்பை பிடித்து உழும் விவசாயியாகவோ, கிராமப் பள்ளி ஆசிரியராகவோ, வேறு தொழிலாளியாகவோ தான் இருந்திருக்க முடியும்.

ஆனால், 60 வயதான அவர் இந்தியாவின் பெரிய இராஜ்ஜியங்களில் ஒன்றாகவும், மிக முக்கியமான இராஜ்ஜியமாகவும் விளங்கும் தமிழ் நாட்டின் முதன் மந்திரியாக அமர்ந்திருக்கிறார். இது மட்டுமின்றிக் காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஆட்டிப் படைக்கும் தலைவர்களுள் ஒருவராகவும் விளங்குகிறார். சாதாரணப்பட்ட ஒருவர் தமது இராஜ்ஜியத்தின் மிகப் பெரிய கௌரவத்தைப் பெற்றிருப்பது நமது சுதந்தர இயக்கத்தாலும், அதைத் தொடர்ந்து நடந்த சமூகப் புரட்சியாலும் ஏற்பட்ட அற்புதங்களில் ஒன்றாகும்.

கோட்டைக்கு வெளியே ரிக்ஷா இழுக்கும் உழைப்பாளிக்கும், முதலமைச்சரின் அறையில் அமர்ந்து அரசோச்சும் தலைவர்க்கும் இடையே நான் கண்ட ஒற்றுமை இன்றைய இந்தியாவையே படம் பிடித்துக் காட்டுகிறது! உண்மையிலேயே வருங்காலத்தில் எளியவர்கள்தான் இந்த உலகைஆளப்போகிறார்கள்.

—கே. ஏ. அப்பாஸ்
''பிளிட்ஸ்'' (பம்பாய்)

முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் ஸ்ரீலங்காவில் கண்டி என்னும் ஊரில் 1917ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 17-ஆம் நாளில் பிறந்தார். தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தில் உள்ள ஆனையடிப் பள்ளியில் ஆரம்பக் கல்வி பயின்றார். 20 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தார். 1972ஆம் ஆண்டு அக்டோபர் 17-ஆம் நாள் அ.இ.அ.தி.மு.க வைத் தோற்றுவித்தார். 1969-லிருந்து அ.இ.அ.தி.மு.க வைத் தோற்றுவிக்கும்வரை, தி.மு.க. பொருளாளராக இருந்து வந்தார். பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்த பொழுது, இவர் சிறுசேமிப்புத் திட்டத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுப் பணியாற்றி வந்தார்.

சிறந்த திரைப்பட நடிகர்; தயாரிப்பாளர்; இயக்குநர்; தினப் பத்திரிகைகளுக்கும் வாரப் பத்திரிகைகளுக்கும் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். சதுரங்கம், குதிரைச் சவாரி, பூப்பந்து, கூடைப் பந்து, கேரம் போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் உடையவர். புத்தகங்கள் படிப்பதில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். இலங்கை, பர்மா, சிங்கப்பூர், ஜப்பான், ஹாங்காங், அமெரிக்கா போன்ற பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்துள்ளார். 1967-லிருந்து தொடர்ந்து தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்து வருகிறார்.

1977-சூன் திங்களில் நடந்த பொதுத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க மகத்தான வெற்றி பெற்றது. திரு எம். ஜி. ஆர். தமிழக முதல்வராகப் பதவியேற்றார். 17.2.1980-அன்று திரு எம்.ஜி.ஆர் தலைமையிலான தமிழக அமைச்சரவை கலைக்கப்பட்டது. அதன் பிறகு, 1980 மே மாத இறுதியில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் அ.இ.அ.தி.மு.க தனிப் பெரும்பான்மை பெற்றது. திரு எம்.ஜி.ஆர் மீண்டும் முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

பொது, பொது நிர்வாகம், ஐ. ஏ. எஸ். அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, இலஞ்ச ஒழிப்பு, பொதுப் பணித்துறை மற்றும் அது சம்பந்தப் பட்ட பணி அமைப்பு ஆகிய துறைகள் முதல்வர் அவர்களின் பொறுப்பில் உள்ளன.

# மாண்புமிகு முதல்வர்
## அவர்களின்
# வாழ்க்கைக் குறிப்புகள்

# மாண்புமிகு அமைச்சர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

## திரு இரா. நெடுஞ்செழியன்

நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் வட்டம் திருக்கண்ண புரத்தில் 11-7-1920ல் பிறந்தார். அவருடைய இயற்பெயர் நாரா யணசாமி என்பதாகும். தந்தை பெயர் இராசகோபாலன். தாயார் பெயர் மீனாட்சிசுந்தரம். பட் டுக்கோட்டை கழக உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். அதன் பிறகு, அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தில் பட்டப் படிப் பும் பட்ட மேல்படிப்பும் பயின் றார். அப்பொழுதுதான், தன் பெயரை நெடுஞ்செழியன் என்று மாற்றி வைத்துக் கொண்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழ கத்தில் பயின்ற காலத்திலேயே தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கையில் ஈடு பாடும் இவருக்கு ஏற்பட்டது.

கல்லூரிப் படிப்பை முடித்த தும் தொழில்மேதை ஜி.டி.நாயுடு அவர்களின் யு.எம்.எஸ். விடுதிக் காப்பாளராகச் சிறிது காலம் இருந்தார். பின்பு, அந்த வேலையை விட்டுவிட்டு நேரே ஈரோட்டுக்குச் சென்று தந்தை பெரியாரின் கொள்கை பரப்புப் பணியில் ஈடுபடலானார்.

1950-ல் நாவலரின் திருமணம் சேலத்தில் நடைபெற்றது. சேலத் தைச் சேர்ந்த திரு. இராமலிங்க னார் அவர்களின் திருமகளார் டாக்டர் விசாலாட்சி அம்மை யாரை நாவலர் மணந்தார். இவர் களுக்கு ஒரே ஒரு மகன் மதி வாணன் என்ற பெயரில் இருக் கிறார்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் 1944-ல் திராவிடர் கழக உறுப்பினரானார். 1949-ல் தி. மு. க. தோன்றிய போது அதன் துணைப் பொதுச் செய லாளரானார். 1955-ல் தி.மு.க பொதுச்செயலாளராகப்பொறுப் பேற்றார். 1961 முதல் 1969 முடிய தி.மு.க. பொதுக்குழுவின் அவைத் தலைவரானார். 1969 முதல் 1976-ஆம் ஆண்டுவரை மீண்டும் தி.மு.க. பொதுச் செய லாளராகப் பணியாற்றினார். 1962 முதல் 1976 வரை மூன்று முறை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1962-ல் எதிர்க்கட்சித் தலை வர், 1967-69 கல்வி - தொழில் அமைச்சர், 1969-71 கல்வி - பொதுநலத்துறை அமைச்சர், 1971-72 கல்வி - வருவாய்த் துறை அமைச்சர், 1972- 74 கல்வி - உள்ளாட்சித்துறை அமைச்சர், 1974 -76 கல்வி - சுற்றுலாத்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

நாவலர் நெடுஞ்செழியன், 'எழுச்சி முரசு'', ''சமுதாய விடுதலை'', ''மூடநம்பிக்கை'', ''களஞ்சியம்'', ''புதிய பாதை'', ''கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்'', ''கலித்தொகை தரும் காதற்காட்சிகள்'', ''குறுந் தொகைக் காதற்காட்சிகள்'', ''நற்றிணைக் காதற்காட்சிகள் ''பண்டைய கிரேக்கம்'', ''புற நானூற்றுப் புதையல்'', ''தி.மு. க'', ''மொழிப் போராட்டம்'', '' ஜியார்டனோ புரூனோ'', ''சொல்லும் சுவையும்'' ஆகிய நூல்களை எழுதியுள்ளார். ''மன் றம்'' தமிழ் வார இதழின் ஆசிரி யர் மற்றும் உரிமையாளராகவும்

வயல்களில் கதிர் குலுங்கிடின் சர்க்கார் அலுவலகங்களில் மகிழ்ச்சி துள்ளும். தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நீதியும்—நிம்மதியும் கிடைத்து உற்பத்தி பெருகிடின், நாட்டு நிலை உயர்ந்திடும். நாட்டின் நிலை உயர்ந்திடப் பணியாற்றிடவே நாம் என்ற உணர்வுடன் மாணவ மணிகள் கல்விக்கூடங்களில் பயிற்சி பெற்றிடின் நாடு மேம்பாடடையும். இவை எல்லா வற்றின் கூட்டே ஆட்சி. சில மண்டபங்களில் மட்டும் செய்யப் படுகிற காரியமல்ல ஆட்சி, நாட்டு ஆட்சி, வீட்டுக்கு—வீடு காணப்படும் பண்பைப் பொறுத்திருக்கிறது.

—பேரறிஞர் அண்ணா

''மாலை மணி'', ''நம் நாடு'' ஆகிய தமிழ் நாளிதழ்களின் ஆசிரியராகவும், ''திராவிடநாடு தமிழ் வார இதழின் துணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

காமன்வெல்த் நாடுகள் மன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும், முதல் உலகத் தமிழ்மாநாட்டில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகள் சென்றிருந்தார். ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஜப்பான், ஹாங்காங், பாங்காக், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குப் பயணம் சென்றிருந்தார்.

1972-ல் மதுரைப் பல்கலைக் கழகம் இவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளது. தமிழில் இவரது புலமை, திறமை கண்டு அறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு ''நாவலர்'' நடமாடும் பல்கலைக் கழகம்'' என்ற அடைமொழிகளை வழங்கினார்.

1977-ல் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவினார். அதன் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். மக்கள் தி.மு. கழகத்தை அகில இந்திய அண்ணா தி.மு.கவில் இணைத்தார். அ.இ. அ.தி.மு.க.வின் பொதுக்குழுவின் அவைத்தலைவராக 1977-78வரை பொறுப்பேற்றார். பின்னர் 1979ல் அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளரானார். 1980 சட்டப் பேரவைத் தேர்தலில் திருநெல்வேலி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பொழுது புரட்சித் தலைவர் திரு எம்.ஜி.ஆர். அவர்களின் அமைச்சரவையில் நிதியமைச்சராக உள்ளார்.

நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்புகள், இளைஞர் அணி, விலைக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர் ஆகிய துறைகளின் பொறுப்புகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## திரு எஸ். இராமச்சந்திரன்

திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் 1937-ஆம் ஆண்டு தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள புலியூரில் பிறந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் படித்து பி.ஈ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றவர்.

பல்கலைக் கழகத்தில் படிக்கும் போதே திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளராகப் பணியாற்றியிருக்கிறார். பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவராகவும் இருந்தவர். தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் பொறியாளராக 1959-ஆம் ஆண்டில் சேர்ந்தார். 1966-ஆம் ஆண்டில் பதவியை விட்டு விலகி அரசியலில் தீவிரமாக இறங்கினார்.

1967-ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் பண்ணுருட்டித்தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆனார். 1967, 1971, 1977 மற்றும் 1980-ஆம் ஆண்டுகளில் இத்தொகுதியிலிருந்து நான்கு முறை தொடர்ந்தாற்போலத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

1971-ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார். இவருடைய நிர்வாகத்தில் போக்குவரத்துத்துறை இலாபத்துடன் இயங்கியது. தொழிலாளர்களுக்குப் பங்குத் தொகை கொடுத்து, நிர்வாகத்தில் தொழிலாளர் பிரதிநிதிகளைச் சேர்த்த பெருமை இவருக்கு உண்டு.
1971, 77-ல் பொதுப்பணி, சிறுபாசனம், இரும்பு, உருக்குக்



கட்டுப்பாடு, மின்சாரம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன.

இப்பொழுது மின்சாரம், இரும்பு மற்றும் உருக்குக் கட்டுப்பாடு ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

## திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

கிராமத் தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமிக்கு வயது 48.

அவர் 1932-ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதி கோவை மாவட்டம் கனியூரில் பிறந்தார். இவர் முன்னாள் அமைச்சர் கே. ஏ. மதியழகனின் தம்பி. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்புப் படித்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. படித்துத் தேறிய

பின், சட்டக் கல்லூரியில்பயின்று 'பி. எல்.' பட்டம் பெற்றார்.

தி.மு. கழகத்தை 1949-ல் பேரறிஞர் அண்ணா தொடங்கியது முதல், அதில் உறுப்பினராக இருந்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றார்.

அ.இ.அ.தி.மு.க. தொடங்கப் பட்ட காலத்தில் இருந்து, அதன் அமைப்புச் செயலாளராகப் பணியாற்றினார்.

திரு கிருஷ்ணசாமிக்கு 1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி பேரறிஞர் அண்ணா தலைமையில் திருமணம் நடந்தது. மனைவி பெயர் புனிதவதி.

கிருஷ்ணசாமி-புனிதவதி தம்பதிகளுக்கு மாங்கனி, கயல்விழி என்ற 2 மகள்களும், அருண், முகில் என்ற 2 மகன்களும் உள்ளனர்.

இவர் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், ஒரு சிறந்த பத்திரிகையாளர். 'தென்னகம்' நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

கடந்த அமைச்சரவையில் கூட்டுறவு அமைச்சராகப் பதவி வகித்தார். இப்பொழுது சிறு தொழில் அடங்கிய கிராமத் தொழில்கள், பால், பால்பண்ணை வளர்ச்சி, பத்திரப் பதிவு ஆகியவை இவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

## திரு எஸ். டி. சோமசுந்தரம்

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள செண்டாங்காடு என்ற கிராமத்தில், விவசாயக் குடும்பத்தில் 25-2-1930-ல் பிறந்தார். செண்டாங்காடு கிராம ஆரம்பப் பள்ளியில் படித்த அவர், இராஜாமடம் நடுநிலைப் பள்ளியிலும், பட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியிலும் படித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றார்.

உடற்பயிற்சியிலும், விளையாட்டிலும் அதிக ஈடுபாடு உடையவர். கால்பந்து, பூப்பந்து, சடுகுடு, ஓட்டப்பந்தயங்களிலும் பள்ளி மாணவப் பருவத்திலிருந்து கல்லூரிப் படிப்பு முடியும் வரை பங்கேற்று வெள்ளிப் பதக்கம், வெள்ளிக் கோப்பைகளைப் பரிசாகப் பெற்றுள்ளார். பள்ளி நாட்களில் மாவட்ட சாம்பியனாகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து 3 ஆண்டுகள் ''சாம்பியன்'' (Track and Field Athletic Champion) பட்டம் பெற்றுள்ளார்.

பள்ளி மாணவப்பருவம் முதற்கொண்டு, திராவிட இயக்கத்தில் ஈடுபாடு உடையவர். திராவிடர் கழகத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத்திலும், முக்கியப் பொறுப்புகளை ஏற்றியிருந்தார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் துவக்க காலத்திலிருந்து முக்கியப் பொறுப்புக்கள் வகித்து வருகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் மாணவர் கழகப் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர். அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் கொள்கை பரப்புச் செயலாளராகப் பணியாற்றியவர்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தினை அமைப்பு ரீதியாகப் பலப்படுத்தியவர். திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராக

இருந்தபோது எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட மாநாடுகளும், மாநில மாநாடுகளும், இந்தி எதிர்ப்பு மாநாடும் நடத்தியவர்.

1965-ல் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வலுவுள்ளதாக நடைபெறுவதற்கு மாணவர் இயக்கத்தை முறைப்படுத்திச் செயல்படச் செய்தவர்.

1962-லிருந்து 1967 வரையிலும் பொதுப்பணித்துறையில் பொறியாளராகப் பணியாற்றியவர். தஞ்சை நாடாளுமன்றத் தொகுதியில், 1967, 1971, 1976 ஆகிய மூன்று தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெற்றவர்.

7-5-1978-ல் தமிழ்நாடு வருவாய்த்துறை அமைச்சரானார். 1978-ல் தமிழக மேலவை உறுப்பினரானார். 7-5-1978 முதல் தமிழ்நாடு அரசு கலைக்கப்படு இறவரை அமைச்சராக இருந்தார்.



1980 சட்டமன்றத் தேர்தலில் பட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று மீண்டும் வருவாய்த் துறை அமைச்சராகப் பணியாற்றி வ்ருகிறார்.

## திரு ஆர். எம் வீரப்பன்

திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வல்லத்திராகோட்டையில் 1926-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ஆம் நாள் பிறந்தார்.

நாச்சியாபுரத்தில் (செட்டிநாடு) பள்ளிக்கூடக் கல்வியை முடித்தார். ஆரம்பத்தில் 11-வது வயதில் காங்கிரசில் ஈடுபாடு கொண்டு இருந்தார். பிறகு 1939-ல் டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகக் குழுவில் சேர்ந்தார். அப்போது பெரியாரின் சுய மரியாதை இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது.

1944 முதல் 1945 வரை திராவிடர் கழகத்தில் சேர்ந்து காரைக்குடியில் முழுநேர ஊழிய ராகப் பணியாற்றினார். பிறகு பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடன் ஈரோட்டில் இருந்தார். பின்னர் கே. ஆர். இராமசாமி நாடகக்குழுவில் நிர்வாகியாகப் பணியாற்றினார். 1946-ல் பேரறிஞர் அண்ணாவுடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அண்ணா அவர்களுடன் காஞ்சிபுரத்தில் சில காலம் இருந்து, 1953-ல் திரு எம். ஜி. ஆர். அவர்களின் 'எம். ஜி. ஆர். நாடக மன்ற'த்தில் நிர்வாகியாகச் சேர்ந்தார். பிறகு 'எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்' பட நிறுவனத்தை நிர்வகித்து வந்தார். 1963-ல் 'சத்யா மூவீஸ்' பட நிறுவனத்தைத் தொடங்கினார்.

தி.மு.க. வில் பொதுக்குழு உறுப்பினராகப் பதவி வகித்தார். அ.இ.அ.தி.மு.க. தொடங்கியதில் இருந்து அரசியலில் தீவிர பங்கு ஏற்றார். அ.இ.அ.தி.மு.க. வில் கலைப்பிரிவுச் செயலாளராக இருந்தார். பிறகு தலைமை நிலையச் செயலாளராக இருந்தார். 1977-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தமிழக அமைச்சரானார். செய்தி - மக்கள் தொடர்பு, திரைப்படத் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டன. பின், அறநிலையம், வனத்துறை ஆகிய துறைகள் ஒப்படைக்கப்பட்டன. இப்போதும் அதே துறைகளின் பொறுப்பினை ஏற்றுள்ளார்.

1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப்பேரவைத் தொகுதியிலிருந்து சட்ட மன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## திரு சி. அரங்கநாயகம்

திரு சி. அரங்கநாயகம் அவர்கள் கோவையில் உள்ள செல்வபுரத்தைச் சேர்ந்தவர். பி.ஏ., பி.டி. பட்டம் பெற்ற இவர் காரமடை, சித்தோடு அரசு உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் வேலை பார்த்தார்.

பின்பு, திங்களூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். ஆசிரியர் தொழிலில் இருக்கும்போதே எம்.ஏ.; பட்டம் பெற்றார். பகல்பூர் பல்கலைக் கழகத்தில் சட்டப் படிப்புக்கான 'பி. எல்.' பட்டம் பெற்றார்.

தலைமை ஆசிரியர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வக்கீல் தொழில் செய்து கொண்டே தீவிரமாக தி. மு. கழகத்தில் பங்கு கொண்டார். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அ.இ.அ.தி.மு.கழகத்தை அமைத்ததும், இவரும் தி.மு. கழகத்தில் இருந்து வெளியேறி அ.இ.அ.தி.மு.க.வில் சேர்ந்தார். 1973-ஆம் ஆண்டு நடந்த கோவை சட்டமன்ற இடைத் தேர்தலில் அ.இ.அ.தி.



மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

திரு. அரங்கநாயகம் அவர்களுக்கு 1958-ஆம் ஆண்டு நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் சேலம் மாவட்டம் குல்லம்பட்டியில் திருமணம் நடந்தது.

1980-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கோயம்புத்தூர் மேற்குத் தொகுதியிலிருந்து இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இப்போது இவரிடம் கல்வி, தொழில் கல்வி, ஆட்சி மொழி ஆகிய துறைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



## திரு கே. காளிமுத்து

திரு கா. காளிமுத்துவுக்குச் சொநத ஊர் சிவகாசிக்கு அருகில் உள்ள ராமுத்தேவன்பட்டி.

மதுரை தியாகராசர் கல்லூரியில் பி. ஏ.; படித்தார். படிக்கும் போதே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரப் பங்கு கொண்டார். மாணவர் தலைவராக விளங்கினார்.

பி.ஏ.; முடித்தவுடன் தனியாக எம்.ஏ.; தேர்வு எழுதிப் பட்டம் பெற்றார். 1965-ஆம் ஆண்டில் அவர் மாணவர் தி.மு.க.வின் தென் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தார். 1970-ஆம்ஆண்டு தன்னுடைய சொந்த ஊரில் ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்பு, 1971-ஆம் ஆண்டு அவர் சிவகாசித் தொகுதியில் இருந்து எம். எல். ஏ. ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். பல போராட்டங்களில் ஈடுபட்டு இவர் பல முறை சிறைக்குப் போயிருக்கிறார். தி.மு.க. விலிருந்து திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் விலகி அ.இ.அ.தி.மு.க. வைத் தொடங்கியவுடன் இவரும் அதில் சேர்ந்தார்.

திரு காளிமுத்து சிறந்த கதை ஆசிரியர். திரைப்படம் ஒன்றிற்கும் கதை வசனம் எழுதியுள்ளார். 1977-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து 1980 பிப்ரவரி திங்கள் வரை இவர் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தார். நகர மன்ற நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சி ஒன்றியம், கிராமக் கடன் வசதி ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

1980-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். வேளாண்மை, வேளாண்மை நிதி ஆகியதுறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## திரு சி. பொன்னையன்

திரு சி. பொன்னையன் அவர்கள், சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள பட்லூர் கவுண்டம் பாளையத்தைச சேர்ந்தவர். 22-2-1942-ல் பிறந்த இவர், திருச்செங்கோடு உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு, பட்டப் படிப்பை திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியிலும், சட்டப் படிப்பைச் சென்னை சட்டக் கல்லூரியிலும் முடித்தார்.

1958-ஆம் ஆண்டிலிருந்து திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டார். விலைவாசி எதிர்ப்புப் போராட்டத்திலும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றுச் சிறை சென்றார். திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தி.மு.க. விலிருந்து பிரிந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய ஆரம்பநாள்தொட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தார். சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரிந்து வந்த இவர், சர்க்காரியா விசாரணைக் கமிஷனில் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் வழக்கறிஞராகவும் பணிபுரிந்தார்.

1977 ஜூன் மாதத்தில் நடந்த தமிழ்நாடு சட்டப் பேரவைத்



தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், சேலம் மாவட்டம் திருச்செங்கோடுசட்டசபைத் தொகுதியிலிருந்து, தமிழ்நாட்டிலேயே அதிகமான வாக்குகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதேபோல, 1980-ல் நடந்த பொதுத் தேர்தலிலும் திருச்செங்கோடு சட்டசபைத்தொகுதியிலிருந்து தமிழ்நாட்டிலேயே அதிக வாக்குகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1971-77-ல் போக்குவரத்து , நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனவரி, பெருவழித்துறை, துறைமுகம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இப்பொழுது கூட்டுறவுத்துறை-சட்டம் மற்றும் நீதிமன்றம், சிறைகள், எடை மற்றும் அளவுகள் சட்டம், நிறுவனங்கள் பதிவு, கடன் வ்ழங்குதல் மீதான கடன் நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம் ஆகியவை இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## திரு பி. குழந்தைவேலு

கோவை மாவட்டம் உடுமலைப் பேட்டைத் தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாகத் தொடர்ந்து சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு பி. குழந்தைவேலு அவர்கள், அ.இ.அ.தி.மு.க. அமைச்சரவையில் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப் பேற்றுள்ளார்.

1977-ல் அமைந்த அ.இ.அ.தி. மு. க. அமைச்சரவையில் வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சராக இருந்தார்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள திருப்பம்பட்டியில் வாழும் நடுத்தர

விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த பழனியப்பக் கவுண்டர்-அலமேலு தம்பதியர்க்கு நான்காவது குழந்தையாக 15-3-1938-ல் பிறந்தவர் இவர்.

இளம் வயதிலேயே கிராம வளர்ச்சியில் பேரார்வம்கொண்டு படிப்பை முடித்த பின் காந்தி கிராமத்தில் உள்ள கிராமிய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையத்தில், கிராமிய நிர்மாணத் திட்டப் பயிற்சி பெற்றுள்ளார்.

பொள்ளாச்சி 'என். ஜி. எம்.' கல்லூரியில் படித்து பொருளாதாரத்தில் 'பி. ஏ.' பட்டம் பெற்ற பின், சென்னை சட்டக் கல்லூரியில் படித்து 'பி. எல்.' பட்டம் பெற்றார்.

ஒரு மகன், இருமகள்களுக்குத் தந்தையான இவர் அண்மையில் 'எம். ஏ.' (பொருளாதாரம்) முதலாண்டுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளார்.

மாணவப் பருவத்திலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளால் கவரப்பட்ட இவர், 1965-ஆம் ஆண்டில் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

பத்தாண்டுக் காலம் உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் புகழ் பெற்ற கிரிமினல், சிவில் வழக்கறிஞராக விளங்கிய இவர், கோவை பாவட்டத்தில் அ.இ.அ.தி.மு.க. வளர்வதற்கு அரும்பாடுபட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, அதை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசுடன் வாதாடி, போராடியதுடன் உண்ணாவிரதம் இருக்கவும் தயார் என்று அறிவித்து நெல்லுக்கும், கரும்புக்கும் அதிக விலை பெற்றுத் தந்தவர் இவர்.

தென்கொரியா, ஹாங்காங், ஜப்பான், சிங்கப்பூர் முதலிய அயல்நாடுகளுக்குச் சென்று, அந்நாட்டின் வேளாண்மை வளர்ச்சிகளைக் கண்டறிந்து வந்துள்ளார்.

## திரு எஸ். இராகவானந்தம்

திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் 1917-ஆம் ஆண்டு ஜனவரி 4-ஆம் தேதி தஞ்சை மாவட்டம் பட்டீசுவரம் கிராமத்தில் பிறந்தார். தஞ்சையில் பள்ளி இறுதி வகுப்புவரைபடித்தவர். இறுதி வகுப்பில் சிறப்பாகத் தேறியதற்காக 'பியர்ஸ் பரிசு' என்ற விருதைப்பெற்றார். விளையாட்டுக்களிலும் பல பரிசுகள் பெற்றார்.

ரெயில்வே தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டு மூன்று முறை கைது செய்யப்பட்டு பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டார். 1961-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் அழைப்பை ஏற்று, ரெயில்வேயில் ஸ்டேஷன் மாஸ்டர் வேலையில் இருந்து தானே விலகி தி. மு. கழகத்தில் சேர்ந்தார். 1965ஆம் ஆண்டு கட்டாய இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் இவர், மனைவியுடன் சிறை சென்றார். தி.மு. கழகம் நடத்திய பல போராட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறார். 1966-ல் தொழிற் சங்கக் கிளர்ச்சிசம்பந்தமாக திருவொற்றியூரில் கைது செய்யப்பட்டார். 1967-ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் எஸ்டேட் எதிரில் தொழிற்சங்கக் கிளர்ச்சிக்காக கைது செய்யப்பட்டார். மறுபடியும் 1968-ல் திருவொற்றியூரில் கைது செய்யப்பட்டார். 1968-லிருந்து 1971 வரை தமிழ்நாடு சட்ட மேலவை



உறுப்பினர். 'என்ஃபீல்டு', டி.ஐ. சைக்கிள்ஸ்', சென்னை மாவட்ட பொதுத் தொழிலாளர் முன்னேற்ற யூனியன், 'அரசுப்போக்குவரத்து', 'மெட்டல் பாக்ஸ்' போன்ற நிறுவனங்களின் சங்கங்களின் தலைமை வகித்தது குறிப்பிடத்தக்கது. கால்பந்து, ஹாக்கி, பூப்பந்து போன்ற விளையாட்டுகளிலும், புத்தகங்கள் படிப்பதிலும் மிகுந்து ஈடுபாடு கொண்டவர்.

தொழிலாளர் நலம், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரம், வடிகால் வாரியம், நகரமைப்பு, புள்ளியல் ஆகிய துறைகள் இவரிடம்ஒப்படைக்கப் பட்டுள்ளன. இதே துறைகளை 1977 ஜூன் திங்களிலிருந்து பிப்ரவரி 1980 வரை வகித்து வந்தார்.

## டாக்டர் திரு எச். வி. ஹண்டே

அரசுப் பணியில் 30 ஆண்டுகளாகப் பணிபுரிந்த டாக்டர் திரு எச். எம். ஹண்டே அவர்களின் மகனாக டாக்டர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் கோயம்புத்தூரில் பிறந்தார். பள்ளிப் பருவத்தில் நாட்டு விடுதலை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றார்.

சென்னை செனாய் நகரில் 1950-ஆம் ஆண்டு முதல், புகழ் பெற்ற மருத்துவராக விளங்கி வருகிறார். 1964-ஆம் ஆண்டு சென்னை மாவட்டப் பட்டதாரிகளின் தொகுதியில் போட்டியிட்டு, சட்ட மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1965-ல் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் சுதந்திராக் கட்சியில் பங்கேற்று தமிழ்நாடு சுதந்திராக் கட்சிக் கிளையின் பொதுச் செயலாளராகவும், அகில இந்திய சுதந்திராக் கட்சியின் கூட்டுச் செயலாளராகவும் பணி புரிந்தார்.

1967, 1971 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் பூங்காநகர்த் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1973-ஆம் ஆண்டு திரு எம். ஜி. ஆர். அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க. வில் சேர்ந்து அக்கட்சியின் தலைமை நிலையச் செயலாளர், அமைப்புச் செயலாளர் ஆகிய பதவிகளை வகித்தார். 1978-ஆம் ஆண்டில் சென்னை

**ஒழுக்கம்**

மற்றவர்களிடம் பழகும் விதத்தையும் ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால் அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

**வாழ்க்கை**

வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக் கூடாது; மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.

— தந்தை பெரியார்

மாவட்ட பட்டதாரிகள் தொகுதியிலிருந்து சட்டமன்ற மேலவைக்கு பெரும்பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1980 மே மாதத்தில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் அண்ணா நகர்த் தொகுதியில் முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி அவர்களுடன் போட்டியிட்டு மிகக்குறைந்த அளவு-699 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

மக்கள் நல்வாழ்வுத்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.

## திரு கே. இராஜா முகமது

திரு கே. இராஜாமுகமது அவர்கள், மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் 5-1-1943-ல் பிறந்தார்.

பெரியகுளத்தில் 'எஸ். எஸ். எல். சி.' வரை படித்தார். பின்பு சென்னை மாநிலக் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்ற இவர், சட்டப் படிப்பு படித்து 'பி.எல்.' 'பட்டம் பெற்றார். பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருக்கும்போதே 1965-ஆம் ஆண்டு மாணவர்களால் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு 9 நாள் சிறைத் தண்டனை பெற்றார். பிறகு, பாளையங்கோட்டையில் 45 நாள் சிறை வைக்கப்பட்டார்.

1972-ஆம் ஆண்டு முதல், சென்னை மாநகராட்சி மன்றச் செயலாளராகவும் பணிபுரிந்து வந்தார். 1977-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட, தனது வேலையை ராஜிமானா செய்தார்.

1971-77-ல் வீட்டு வசதிக் கட்டுப்பாடு, பத்திரிகைக்காகிதக் கட்டுப்பாடு, சேவைக் கூட்டுறவுகள், வக்ப் போர்டு, ஆலைத் துணி, நூல், கைத்தறி, கதர் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இப்பொழுது இவரிடம் வேளாண்மைப் பணிகள் பற்றிய கூட்டுறவுச் சங்கங்கள், சிறிய நீர்ப்பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனப் பணிகள், வக்ப் போர்டு போன்றவை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலவையில் ஆளுங்கட்சியின் தலைவராக-அவை முன்னவராக நியமிக்கப்பட்டுள்ளார். 1977-ஆம் ஆண்டு ஜூலை முதல் 1980 பிப்ரவரி மாதம் வரை இந்தப் பொறுப்பில் ஏற்கெனவே பணியாற்றியிருக்கிறார்.

## திரு எஸ். முத்துசாமி

போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு எஸ். முத்துசாமி ஈரோடு தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1977 தேர்தலிலும், இதே தொகுதியில் வெற்றி பெற்றார்.

திரு எஸ். முத்துசாமிக்கு 32 வயதாகிறது. 1948ஆம் ஆண்டு அக்டோபர் 16-ல் பிறந்தார். தந்தை பெயர் சுப்பராயக் கவுண்டர்.

திருமணமான திரு எஸ். முத்துசாமிக்கு ஒரு மகன் இருக்கிறார். பேருந்துத் தொழிலில் மிகுந்த அனுபவமும்-ஆர்வமும் உள்ளவர்.



இவரிடம் போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துகள் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், துறைமுகங்கள் ஆகியதுறைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## திரு எஸ். திருநாவுக்கரசு

திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 5-7-1949-ல் புதுக்கோட்டை மாவட்டம் தீயத்தூரில் பிறந்தார். தகப்பனார் பெயர் சுப்பராமத் தேவர். தாயார் பெயர் காளியம்மாள். இவர் தீயத்தூர் ஊராட்சித் தலைவர்.

தனது ஆரம்பப் படிப்பைப் பாதிரக்குடி, ஓரியூர் ஆகிய இடங்களில் முடித்த திரு. திருநாவுக்கரசு அவர்கள், கல்லூரிப் படிப்பைப் பாளையங் கோட்டையில் உள்ள சவேரியார் கல்லூரியிலும், அதிராமபட்டினத்தில் உள்ள காதர் முகைதீன் கல்லூரியிலும் முடித்து, "பி.ஏ." பட்டம் பெற்றார். பின்பு, சென்னை சட்டக் கல்லூரியில் வக்கீல் வேலைக்குப் படித்து, "பி. எல்.," பட்டம் பெற்றார். பிறகு புதுக்கோட்டையில் வழக்கறிஞராகத் தொழில் செய்தார்.

பள்ளியில் மாணவத் தலைவராக இருந்தார்.

கல்லூரியில் படிக்கும்போதே தி.மு.க. வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதன் பின்பு, திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அ.இ.அ.தி.மு.க. வைத் தொடங்கியவுடன் இவரும் தி.மு.க. வில் இருந்து விலகி அ.இ.அ.தி.மு.க. வில் சேர்ந்தார்.

முதன் முதலில் 1977-ல் அறந்தாங்கி தொகுதியிலிருந்து சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1977 முதல் பிப்ரவரி 1980 வரை சட்டமன்றப் பேரவைத் துணைச் சபாநாயகராக இருந்தார்.



நியூஸ்லாந்து நாட்டில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் பார்லிமெண்டிரிக் கழகத்தின் 25-வது வருடாந்திர மாநாட்டில் தமிழ்நாடு கிளையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

1980-மே திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் அறந்தாங்கி தொகுதியிலிருந்தே சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் ஆலைத் துணி ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## திரு எஸ். என். ராஜேந்திரன்

கைத்தறி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு எஸ். என். ராஜேந்திரனுக்கு வயது 44. இவர் 11-7-1935-ல் பிறந்தார். தூத்துக்குடியைச் சேர்ந்தவர். இவரது தகப்பனார் திரு நீதி மாணிக்க நாடார். சுயமரியாதை இயக்கத்தில் தீவிரம் காட்டியவர்.

திரு எஸ். என். ராஜேந்திரன் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் 'பி. ஏ.' பட்டம் பெற்று சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பை முடித்தார். 1960-1964 வரை மதுரையிலும்

பின்னர் தொடர்ச்சியாக தூத்துக்குடியிலும் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். 1965-ல் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கு ஆதரவு காட்டி இலவசமாக வாதாடியிருக்கிறார்.

1972-ல் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அ. இ. அ. தி. மு. க. வைத் தொடங்கியபோது திரு எஸ். என். ராஜேந்திரனும் அ.இ. அ.தி.மு.க. வில் சேர்ந்தார். அ.இ.அ.தி.மு.க. பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்து வந்தார்.

திரு எஸ். என். ராஜேந்திரன் திருமணம் ஆனவர். மனைவி பெயர் மேரி. 4 மகன்களும் 1 மகளும் உள்ளனர்.

இவரிடம் கைத்தறி, கதர், மதுபர்மிட் தவிர்த்த மதுவிலக்கு, பாஸ்போர்ட் ஆகிய துறைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



## திரு எம். விஜயசாரதி

அரிசன நலத்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ள திரு எம். விஜயசாரதி அவர்கள் 14-1-1954 இல் பிறந்தார். 'பி.ஏ.' பட்டம் பெற்றவர்.

எடை தூக்குதல், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் உள்ளவர். புத்தகங்கள் படிப்பதில் மிகுந்த ஈடுபாடு உண்டு.

கடந்த தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளராக அரக்கோணம் தனித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரிடம் அரிசனநலம், எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பகுதியினர் நல்வாழ்வு, கொத்தடிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆகிய துறைகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

## திருமதி கோமதி சீனிவாசன்

திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள், தஞ்சை மாவட்டம் வலங்கைமான் தொகுதியில் அ.இ அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றவர். 'பி.ஏ.' பட்டதாரி. வயது 30.

கும்பகோணம் அரசினர் பெண்கள் கல்லூரியில் 'பி.ஏ' வரை படித்தார். அதன் பின்பு கோவை அரசினர் பயிற்சிக் கல்லூரியில் (பி. டி.) ஆசிரியர் பதவிக்குரிய பட்டம் பெற்றார்.

திருமதி கோமதிக்குச் சொந்த ஊர், வலங்கைமான் தொகுதியில் உள்ள நரியனூர்.

திருமதி கோமதி கர்நாடக சங்கீதத்தில் மாநில விருது பெற்று இருக்கிறார்.

இவரிடம் சமூகநலத்துறை, மகளிர் நலம், சிறுவர் நலம், கால்நடை வளம், பிச்சைக்காரர் மறுவாழ்வு, அனாதை இல்லம், வெளிநாட்டு இந்தியர், அகதிகள் நலம், இடம் பெயர்ந்தோர் நலம், சீர்திருத்தப் பள்ளிகள் ஆகிய துறைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் குடியரசுத் தலைவர்

டாக்டர் **வி. வி. கிரி**

தோற்றம்: 10-8-1894 மறைவு: 24-6-1980

# ஏழைகளுக்குப் பாடுபட்ட இலட்சியத் தலைவர்

## ஆளுநர் விடுத்த இரங்கல் செய்தி

இறுதி மூச்சு வரை சுறுசுறுப்புடன் பணியாற்றி வந்த இந்தியாவின் முதுபெரும் தலைவராகிய டாக்டர் கிரி அவர்கள் மறைந்து விட்டார்.

நீண்ட நெடிய பயனுள்ள பொதுப்பணி அவருடையது. அவர் வகிக்காத பெரிய பதவி இல்லை. நாட்டின் மிகப் பெரிய பதவியாகிய குடியரசுத் தலைவராக நாடு அவரைத் தேர்ந்தெடுத்தது, அவர் வாழ்க்கையிலேயே தனிச் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

தொழிற்சங்க இயக்கப் பணி, அவருடைய சிறப்பான அம்சமாகும். பாடுபடும் பாட்டாளி வர்க்கத்தின் நல்வாழ்விலே அவர் தன்னைத் தானே முழுக்க முழுக்க ஈடுபடுத்திக் கொண்டார். சுதந்திரப் போராட்டக் காலத்திலும் அதன் பிறகு நாடு விடுதலை பெற்ற பிறகும் பல்வேறு பதவிகளை வகித்தபோதும் ஏழை எளிய அடித்தளத்து மக்களுக்குப் பாடுபடுவதையே தன்னுடைய இலட்சியமாக அவர் கொண்டிருந்தார்.

நாட்டை எதிர்நோக்கியிருந்த பல்வேறு பட்ட முக்கியமான பிரச்சினைகள் குறித்து அவரது கருத்துக்களை, வாய்மொழி மூலமாகவும் எழுத்துக்கள் மூலமாகவும் நாம் அவ்வப்போது அறிந்து வந்தோம்.

மகாத்மா காந்தியுடன் மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டு பணியாற்றிய பழம்பெரும் தலைவர் ஒருவரை நாம் இழந்துவிட்டோம். அவர் வாழ்ந்த வாழ்வு, அவர் ஆற்றிய பணி, எதிர்காலப் பரம்பரையினருக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தொடர்ந்து அளிக்கும் என்பதில் எனக்கு எந்தவித ஐயப்பாடும் இல்லை.

அன்னாருடைய ஆத்மா சாந்தி அடைவதாக!

# இந்திய வரலாற்றில் இடம் பெற்ற தலைவர்

## முதல்வர் விடுத்த இரங்கல் செய்தி

'85 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து இன்று நம்மை விட்டுப் பிரிந்த பெருமதிப்புக்குரிய வி. வி. கிரியின் மறைவு ஈடுசெய்ய முடியாத மிகப் பெரிய இழப்பாகும்.

இந்தியத் துணைக் கண்டத்திற்குப் பெருமைத் தேடித்தந்த பெருமக்களில் வி. வி. கிரி தலைசிறந்தவர் ஆவார். வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கி தொழிலாளர்களின் நலனுக்காகவும், தூய்மையான பொது அரசியல் வாழ்வுக்காகவும் கடைசி மூச்சு, காற்றிலே கலக்கும் வரை ஓய்வின்றி உழைத்த பெருமகனாவார்.

குறிப்பாக, தொழிலாளர் நலனுக்கான சட்டம் ஒன்றில் கருத்து வேறுபாடு தோன்றிய பொழுது மத்திய அமைச்சர் பதவியைத் துறந்து, மக்கள் பணியாற்ற அமைச்சரவையில் இருந்து வெளியேறினார். எளிமையான வாழ்வை மேற்கொண்டு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் மிக உயர்ந்த பதவிகளை வகித்து இந்தியத் துணைக் கண்டத்தின் முதல் குடிமகனாக இந்தியக் குடியரசுத் தலைவர் பொறுப்பேற்று அவர் ஆற்றிய பணிகள் இந்திய வரலாற்றில என்றென்றும் இடம் பெறத்தக்கவையாகும்

அவருடைய மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்றாலும், அவர் காட்டிய தூய வழியில் செயலாற்றுவதன் மூலம் அவருக்கு நாம் நம்முடைய வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள முயலுவோம். அவரைப் பிரிந்து துயர் உறும் அவருடைய குடும்பத்தினர் அனைவருக்கும் என் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



வி.வி.கிரி அவர்களின்
இறுதிப் பயணம்






1. மத்திய உள்துறை அமைச்சர் திரு ஜெயில்சிங்
2. மத்திய நிதி அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன்
3. ஆந்திர மாநில முதல்வர் திரு எம். சென்னாரெட்டி





4. இறுதி அஞ்சலி செலுத்துவதற்குத் திரண்டிருந்த பிரமுகர்கள்
5. இராணுவ மரியாதை
6. சிதைக்கு தீமூட்டப்படுதல்

# சஞ்சய் காந்தி மறைவுக்கு இரங்கல்

## பிரதமருக்கு
### ஆளுநர் விடுத்த இரங்கல் செய்தி

வாழ்வின் வசந்த காலத்திலே, விமான விபத்தில் சிக்கி, திரு சஞ்சய் காந்தி அவர்கள் திடீர் மரணம் அடைந்தார் என்ற செய்தி அறிந்து, தாங்கொணா துயரமும் அதிர்ச்சியும் அடைந்தேன். இந்த மிக மிக துக்ககரமான நேரத்தில் உங்களுக்கு ஆறுதல் சொல்ல எனக்குப் போதிய வார்த்தைகளே கிடைக்கவில்லை. இந்தப் பேரிழப்பைத் தாங்கிக் கொள்ள ஆண்டவன் அதற்கான சக்தியை உங்களுக்கு அளிப்பாணாக! உங்களுடைய தாங்கொணா துயரத்தில் இந்த நாட்டின் கோடானு கோடி மக்களும் பங்கேற்கின்றனர். திரு சஞ்சய் காந்தியின் ஆத்மா சாந்தி அடைவதாக!

## பிரதமருக்கு
### முதல்வர் விடுத்த இரங்கல் செய்தி

சஞ்சய் காந்தியின் துயரமான மரணத்தில் இந்த நாடு அடைந்துள்ள ஈடுசெய்ய முடியாத இழப்பினால் நீங்கள் கொண்டுள்ள துயரில் நானும் பங்கு கொள்கிறேன்.

உங்களுக்கு எங்கள் மனமார்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துயரமான இழப்பைத் தாங்கும் வலிமை உங்களுக்குக் கிடைக்கட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர்
மலர் வளையம் வைக்கிறார்

# சஞ்சய் காந்தி மறைவு 23-6-80

டெல்லியில் சஞ்சய்
இறுதிப் பயணம்



தமிழக முதல்வர் மலர் வளையம் வைக்கிறார்

சஞ்சய் அஸ்தி கலசத்துக்கு
ஆளுநர் மலர் வளையம் வைக்கிறார்



சென்னையில் அஸ்தி கரைப்பு
ஊர்வலத்தில் அமைச்சர்களும் பிரமுகர்களும்

# ஆறுதல் பெறுக !



மணம்வீச மலர்ந்த மொட்டு
முழுவதும் மலரும் முன்னே
தணலிலே கருகிற் றென்றால்
யாரிதைச் சகித்துக் கொள்வார்?
பணியினை முடிக்கு முன்பே
பாழ்விதி சஞ்சய் காந்தி
அணியுயிர் குடித்த பொல்லாக்
கொடுமையை யார்பொ றுப்பார்?

இளந்தளிர் கருகிற் றேயோ ?
இளைஞர்தம் இதய வானில்
முளைத்ததோர் இளங்க திர்தான்
வீழ்ந்ததோ என்று மக்கள்
உளமிக வருந்திக் கண்ணீர்
உகுத்திட பார தத்தின்
இளைஞர்தம் தலைவன் சஞ்சய்
இறப்பினைத் தழுவிக் கொண்டான்!

அரசியல் நுட்பத் தோடு
ஆற்றலும் துணிவும் கொண்டு;
வரலாறு படைத்தான் ; தானோர்
வரலாறே ஆனான் ; மக்கள்;
'வருங்கால பார தத்தின்
வழிகாட்டி யாவான்' என்று
கருதினார் ; அவருள் ளத்தில்
கனல்மூட்டிச் சென்று விட்டான் !

சஞ்சலக் கடலில் தள்ளிச்
சாவினை அணைத்துக் கொண்டான்!
சஞ்சய்நம் நெஞ்சில் நீங்காத்
தவிசினைப் பெற்றுக் கொண்டான்!
செஞ்சுடர்ப் பரிதி தானும்
திங்களும் வாழும் மட்டும்
சஞ்சய்தன் புகழும் வாழும் !
சரித்திரம் அவன்பேர் கூறும் !

மைந்தனின் பிரிவால் இங்கே
மாத்துய ரெய்தி நிற்கும்
இந்திய நாட்டின் தலைவி
பிரதமர் இந்தி ராவின்
வெந்துயர் துடைக்கும் ஆற்றல்
முழுவதும் இலையென் றாலும்
சிந்தையால் பங்கேற் கின்றோம்.
செந்தமிழ் நாட்டு மக்கள்.

தமிழக மக்கள் பெற்ற
தனித்துயர் காட்டும் எங்கள்
தமிழக முதல்வர் - மக்கள்
தலைவரின். கண்ணீர் வெள்ளம் !
தமிழக மக்கள் கூறும்
ஆறுதல் சின்னம் அஃதே!
அமைவுற வேண்டு கின்றோம்
ஆறுதல் பெறுக என்றே !

—கவிஞர் சாமி பழனியப்பன்

# பட்டுப்புழு வளர்ப்போம்

ஆர். பூர்ணலிங்கம், ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி.

திருமணம் என்றாலே காஞ்சிப் பட்டில் அனைவரின் கவனமும் செல்கிறது. பட்டுப்பெருக்கத்தில் இந்தியா தலை சிறந்து விளங்குகிறது. தமிழகத்தில் தருமபுரி மாவட்டம்தான் பட்டுப் புழு வளர்ப்புத் துவக்க இடமாகத் திகழ்ந்தது. தமிழகத்தின் முசுக்கட்டைச் சாகுபடி பரப்பில் 25% தருமபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. தற்பொழுது 8,500 ஏக்கர் பரப்பில் தருமபுரி மாவட்டத்தில் முசுக்கட்டை பயிரிடப்பட்டு வருகிறது.



வேலை வாய்ப்பை நல்கி, கிராமப் புறப் பொருளாதாரத்தை வளர்த்து, மாதந்தோறும் வருமானம் தரும் தொழில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலாகும். படித்தவர்களும், படிக்காதவர்களும், பெண்டிரும், சிறுவரும், உடல் ஊனமுற்றோரும் இத்தொழிலைச் செய்யலாம். பட்டுப் புழு வளர்ப்பிற்கு முசுக்கட்டைச் செடி பயிரிடுதல் முதல் படியாகும். முசுக்கட்டைச்செடியை நஞ்சையிலும், புஞ்சையிலும், நீர் வளம் மிகுந்த இடங்களிலும், நீர்வளம் குன்றிய இடங்களிலும் பயிரிடலாம். ஒரு தடவை பயிரிட்டால் 15 ஆண்டுகளுக்குப் பயன் அளிக்கும். மற்றப் பயிர்களை விட, முசுக்கட்டைச் செடி பயிரிடுதலில் செலவும் குறைவு; வருமானமும் அதிகமாகும். மணல் கலந்த செம்மண், வண்டல் மண் கரிசல் மண், முசுக்கட்டைச்செடி பயிரிட ஏற்புடையவைகளாகும்.

## முசுக்கட்டைச்செடி பயிரிட...

முசுக்கட்டைச்செடி ஆழமாக வேர்விட்டு வளரும் செடியாகும். ஆகவே நிலத்தை ஆழ உழுவது சிறந்ததாகும். நிலத்தை நன்கு உழுதபின் ஏக்கருக்கு 25 வண்டி தொழு உரம் அடி உரமாக இட்டு திரும்பத் திரும்ப உழுதபின் பாத்திகள் அமைக்கப்பட வேண்டும், முசுக்கட்டை விதைக் குச்சிகளை தேன்கனிக்கோட்டை, ஓசூர், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் உள்ள உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகிப் பெற்றுக் கொள்ளலாம். நன்கு முற்றிய கணுக்களை உடைய குச்சிகளைத் தேர்வு செய்து அரை அடி நீளத்தில் 3 கணுக்களைக் கொண்ட துண்டுகளாக வெட்டி, வெட்டப்பட்ட அன்றே நட்டுவிட வேண்டும். மறுநாள் நடவு செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டால் குச்சிகளை ஈரச்சாக்குகளிலோ, அல்லது ஈரமணலிலோ பாதுகாப்பாக வைத்திடல் வேண்டும். குச்சிகளை நல்ல இடைவெளிவிட்டு, பாத்திகளின் சரிவில், நீர் கட்டப்பட்ட நிலத்தில், நட வேண்டும். நடவு முடிந்த பின் பாத்தியில் ஈரம் காயாத வண்ணமும், அதே நேரத்தில் நீர் தேங்கி நிற்காமலும், நீர் கட்டுதல் வேண்டும். செடி நன்கு வேரூன்றி வளரும் வரை 3 நாட்களுக்கு ஒரு முறையும், செடி நன்கு வளர்ந்த பின் வாரம் ஒரு முறையும் நீர் பாய்ச்சுதல் வேண்டும்.

புஞ்சை நிலத்தில் குச்சிகளை ஆழக் குழி தோண்டி, உரமிட்டு பாத்திகளில் சாய்வாக நட்டு நீர் பாய்ச்ச வேண்டும். 45 நாட்கள் கழித்து ஏக்கர் ஒன்றுக்கு 1 மூட்டை காம்லெக்ஸ் உரமிடுவது நல்லதாகும். நடப்பட்ட செடி 120 நாட்களில் பட்டுப்புழு வளர்ப்பிற்குத் தழை தரும் நிலையை அடையும்.

## பட்டுப்புழு வளர்ப்பு:

முசுக்கட்டை பயிரிட்ட விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 100 உதவித் தொகையுடன் 3 மாத காலத்திற்குப்பட்டுப்பூச்சிவளர்ப்பில் பயிற்சியும், பயிற்சி முடிந்த பின் ரூ. 250 பெறுமான கருவிகள் இலவசமாகவும் வழங்கப்படும். முசுக்கட்டை பயிரிடத் தொடங்கியது முதல் பட்டுப்புழு வளர்ப்புத்துறை களப்பணியாளர்கள் விவசாயிகளுக்கு உதவிடுவார்கள். பட்டுப்புழு வளர்ப்பிற்கு முசுக்கட்டை பயிர் தகுந்த நிலையை எய்தியவுடன் அரசு முட்டை வித்தகத்திலிருந்து நிர்ணய விலையில் களப் பணியாளர்கள் மூலம் முட்டைகள் வழங்கப்படுகிறது. நீர்ப் பாசன வசதியுள்ள ஒரு ஏக்கர் முசுக்கட்டைத் தோட்டத்தில் ஒரு சாகுபடியில் 250 முதல் 300 முட்டைத் தொகுதிகளை வளர்க்க இயலும். ஆண்டொன்றிற்கு 6 சாகுபடிகளைச் செய்ய இயலும்.

பட்டுப்புழு வளர்ப்பிற்கு முன் புழு வளர்ப்பு அறையையும், புழு வளர்ப்புத் தளவாடங்களையும்

ஒரு பங்கு பார்மலின், 19 பங்கு நீர் கலந்து சுத்தம் செய்ய வேண்டும்.

முட்டைத் தொகுதிகளைத் தட்டுகளில், மெழுகுத்தாள்களைப் பரப்பி, ஒவ்வொரு தட்டிலும் 25 முட்டைத் தொகுதி விதம் வைத்து, முட்டைகளைச் சுற்றிலும் நீரில் நனைத்த நுரை ரப்பரை வைத்து அதன் மேல்



மெழுகு பேப்பர் கொண்டு மூட வேண்டும். முட்டைகளை எப்பொழுதும் வெப்பம் மிகுதியான இடத்தில் வைக்கக்கூடாது. முட்டையிட்ட நாளிலிருந்து 10-வது நாள் சிற்றெறும்பைப்போல் முட்டையிலிருந்து இளம் புழுக்கள் வெளிவரும். இளம் புழுக்கள் சீராக வெளிவந்தவுடன் மூசுக்கட்டை இளம் தளிரைச் சிறிதுசிறிதாகக் கிள்ளி நாளொன்றுக்கு 5 முறை போட வேண்டும். புழுக்கள் பெரிதாகப் பெரிதாக அதற்கேற்ப தளிர்களைப் போட வேண்டும். 24 நாட்களில் புழுக்கள் வளர்ந்து கூடு கட்டத்துவங்கி விடும்.

நல்ல முறையில் கவனித்தால் நல்ல தரமான கூடுகள் கிடைக்கும். கூடுகள் கட்டுவதற்கு முன் புழுக்களின் வளர்ச்சிக்கேற்ப நாலைந்து முறை தோல் உரிக்கும். இத் தருணத்தில் புழு வளர்ப்புத் தட்டுகளை அடிக்கடி சுத்தம் செய்தல் வேண்டும் முதிர்ந்த புழுக்களை நல்ல காற்றோட்டமான அறைகளில் வளர்க்க வேண்டும். புழுக்களுக்குப்போடுகிற இலை தூய்மையானதாகவும், பசுமை நிறம் உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

புழுக்கள் 4-வது பருவம் முடிந்து 6,7 நாட்களில் கூடுகட்டும் பருவத்தை எய்தும். அப்பொழுது புழுக்கள் இளம் மஞ்சள் நிறமாயும், மினுமினுப்புடனும் காணப்படும். அத்தருணத்தில் புழுக்களைப் பொறுக்கி சந்திரிகைகளில் 1 சதுர மீட்டர் பரப்பில் 800 முதல் 900 புழுக்கள் வரை விட வேண்டும். புழுக்களை நெருக்கமாக விட்டால் இரட்டைக் கூடுகள் அதிகமாகி பட்டுக்கூடுகளின் தரம் குறைந்து வருமானமும் குறைந்து விடும்.

கூடு கட்டிய 4 நாளில் பட்டுக்கூடுகளை அறுவடை செய்ய வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் ஓசூர், தேன்கனிக்கோட்டை, பாப்பாரபட்டி, கிருஷ்ணகிரி, தருமபுரி, அரூர், ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ள அங்காடிகளில் விற்றுப் பணம் பெறலாம். கூடுகளின் தரத்திற்கேற்பவும், அக்கூடுகளில் உள்ள பட்டிற்கேற்பவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டு பணம் தரப்படும்.

பட்டுப்புழுவைப் பராமரிப்பதில் ஏற்பட்டு வரும் கவனக்குறைவால் பெப்ரின், பிளாச்சரி, மஸ்கார்டைன், கிராசரி ஆகிய 4 வகையான நோய்கள் ஏற்படுகின்றன.

**பெப்ரின்:**

பெப்ரின் நோய் கண்ட புழுக்கள் உணவு கொள்ளாமல் மந்தமாகவும், தலைகளைத் தொங்கவிட்டுக் கொண்டும், உடலின் மேல் பகுதியில் கரும்புள்ளிகளுடனும்காணப்படும். நோயுற்ற புழுக்கள் இட்ட முட்டையினை அழித்து விட வேண்டும். புழு வளர்ப்பு அறைகளையும், தளவாடங்களையும் ஒரு பங்கு பார்மலினில் 9 பங்கு நீர் கலந்து சுத்தம் செய்தல் வேண்டும்.

**பிளாச்சரி:**

பிளாச்சரி நோய் கண்ட புழு சுருங்கிப்போய் விடுவதோடு, புழு கருநிறமாகவும், முன்பக்கமும், பின்பக்கமும் நீர் கசிந்து கொண்டிருக்கும். முன்னெச்சரிக்கையாக டைத்தேன் எம். 45 மருந்து ஒரு பாகமும், 99 பாகம் சுண்ணாம்புத்தூளும் கலந்து புழு வளர்க்கும் தட்டுகளில் தெளிக்க வேண்டும்.

**மஸ்கார்டைன்:**

மஸ்கார்டைன் நோய் மழைக் காலங்களில் பூஞ்சைக்காளான்களால் ஏற்படுகிறது. இதனால் புழுக்கள் இறந்து விடுவதோடு சுண்ணாம்புக்கட்டியைப் போல் ஆகிவிடும். மழைக்காலங்களில் இந்நோய் வராமல் தடுக்க பார்மலின் கலந்த உமியைப் பயன்படுத்த வேண்டும். புழுவின் வயதிற்கேற்ப உமியில் பார்மலின் கலந்து புழு வளர்க்கும் தட்டுகளில் தூவி விடுதல் வேண்டும்.

**கிராசரி:**

கிராசரி நோய் வைரஸ் கிருமிகளால் உண்டாகிறது. பெரும்பாலும் புழு கூடு கட்டுவதற்கு முன்னரே இந்நோய் தாக்குகிறது. செரஸான் சுண்ணாம்புத்தூளை 1.19 என்ற விகிதத்தில் கலந்து தட்டில் தூவ வேண்டும்.

முதன் முறையாகப் புழுவை நோய் தாக்கினால் 4% பார்மலின் கலந்த நீரையும், மறுமுறை 2% பார்மலின் கலந்த நீரையும் கொண்டு மருந்தடித்தால் நோய்களைத் தடுக்க முடியும்.

பட்டுப்புழு வளர்ப்பிற்கு 300 சதுர அடி பரப்பில் கூடு அமைக்க ரூ. 2,500 கடனுக்கு 25% மானியம் அளிக்கப்படும். மீதித் தொகை வங்கியிலிருந்து கடனாக அளிக்கப்படும். பட்டுப்புழு வளர்ப்புக்கருவிகள் வாங்க ரூ. 1500 கடனுக்கு 25% மானியம் வழங்கப்படும். மீதித் தொகைக்குக் கடன் தரப்படும்.

முசுக்கட்டைச்செடி 1 ஏக்கரில் பயிரிட ரூ. 3,600ம், ஒவ்வொரு சாகுபடிக்குப் பின்னர், பராமரிப்புச்செலவு ரூ. 700ம் ஆகும். ஒரு ஆண்டில் ரூ. 15,000 வரை வருமானம் கிடைக்கும். ஆண்டொன்றிற்கு நிகர வருமானம் ரூ. 10,000லிருந்து ரூ. 12,000 வரை பெற வாய்ப்புள்ளது.

இத்தொழிலால் பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது.

பட்டுப்புழு வளர்ப்போம்,

வளமான வாழ்வை அமைப்போம்!!

# அரசின் அறிவிப்புகள்-ஆக்கப் பணிகள்

**[9-6-80 முதல் 21-6-80 முடிய]**

## 11—6—80

'உலகத் தமிழ்மாநாடு 1981-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை மதுரைமாநகரில் சிறப்பான முறையில் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளைத் தமிழக அரசு கவனித்து வருகிறது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

## 12—6—80

தமிழக நெசவாளர்களின் துயர்களைத் துடைக்க, அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. இதற்கு முதல் கட்டமாக, கைத்தறித் துணிகள் மீதான மத்திய அரசின் வ்ரிகளை நீக்கும்படி கேட்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் கூறினார்.

குடும்ப நலத் திட்டம், ஆலய ஊழியர்களுக்கும் விரிவாக்கப்படுகிறது. ஆலய ஊழியர்கள் இறந்து போனால், அவர்களது குடும்பத்திற்கு ரூ.5 ஆயிரம் வரை உதவிப் பணம் வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

## 13—6—80

கைத்தறி பாலியஸ்டர் காக்கி துணியை காவல்துறை மற்றும் இராணுவத்திற்குப் பயன்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் கூறினார்.

வெளிமார்க்கெட்டில் சர்க்கரை விலையைக் குறைக்கவும்; சர்க்கரை வியாபாரத்தில் உள்ள இடைத் தரகர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் மத்திய அரசின் ஒப்புதலுடன் 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை வியாபாரிகள் உரிமங்கள் உத்தரவில் தமிழக அரசு திருத்தம் செய்துள்ளது.

## 14—6—80

ஏழை எளிய மக்கள் பலன் பெற, வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்தை மீண்டும் தீவிரமாகச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் உத்தரவிட்டுள்ளார். தென்னார்க்காடு மாவட்டத்துக்கு மட்டும் ஆயிரம் டன் அரிசியை, அரசு, இதற்காக ஒதுக்கியுள்ளது.

நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எட்டு அம்சத் திட்டத்தை நிறைவேற்ற உள்ளோம். கைத்தறித் துறையில் கூட்டுறவின் சேவையை அதிகரித்தல், நலிவுற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல், ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெருக்குதல், நெசவாளர்களுக்குச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புக்கான திட்டம், நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் ஆகியவை இதில் அடங்கும் என்று மாண்புமிகு கைத்தறி—கதர்த் துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் கூறினார்.

## 15—6—80

மதுரையில் ரூ. 38.60 இலட்சம் செலவில் 108 படுக்கைகள் கொண்ட ஓட்டல் ஒன்றைக் கட்டிக்கொண்டிருப்பதாகவும், இந்த ஓட்டல் மதுரையில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்கு முன்பாகக் கட்டி முடிக்கப்பட்டு விடும் என்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை. தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**

  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.

- **கிராம ஏற்புத் திட்டம்:**

  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.

- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**

  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.

- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**

  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப். படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

MFL 2111

அறிவியல் அரங்கம்:

# பறவைகளின் சாமர்த்தியம்

—டாக்டர் ஜி. துரைராஜ்

கானப்பறவையின் குரல் காற்றில் மிதந்து வரும். ஆனால், காற்றை விட கனமான, அடர்த்தியான பொருள்கள் வானில் பறக்க எண்ணும்போது, எடை குறைப்பு, பரப்பளவைப் பெரிதாக்கல், உடல் உருவம் தோற்றத்தில் மாற்றம் இவற்றைக் காண்கிறோம். பறவைகளும் இவ் விதிக்கு விலக்கல்ல. எனவே, காற்றில் மிதக்க உதவும் சிறகுகள், சிறிய உடல், மெல்லிய குழாய் வடிவ எலும்புகள், அவ்வெலும்புகளில் காற்றுப் பைகள், காற்றில் மிதந்து செல்லும்போது உடல் எடையைச் சிறகுகளில் தாங்கிக் கொள்ளும் தன்மை, நடக்கும்போது எடையைக் கால்களில் தாங்கிக் கொள்ளும் பாங்கு, மார்பு எலும்புகள் முன்னோக்கி வளைந்து, இடுப்பின் பின்எலும்பு பின்நோக்கில் வளைந்து, இம் மாறுபட்ட வளைவுகள் உடல் அமைப்பைச் சமன்செய்து எளிதில் பறக்க உறுதுணை புரிகின்றன. தோள் தசைகளும் இடுப்பு தசைகளும் பெரிதாகி, மூட்டுகளின் எடைக்குச் சமன் செய்து Propulsion எனப்படும் முன்னோக்கி ஊடுருவிச் செல்ல ஏதுவாகிறது. Pectoralis Major எனப்படும் தோளின் பெருந் தசைகள் சிறகுகளைத் தாழ்த்தவும், Pectoralis Minor எனும் சிறு தசைகள் சிறகுகளை உயர்த்தவும் துணை செய்கின்றன.

Keel எனப்படும் படகின் அடிப்பகுதிப் போன்ற மார்பு எலும்புகள் சிறந்த விசைப் பலனை அளிக்க உதவுகின்றன.

விஞ்ஞான ரீதியில்காணும் போது, பறவைகள்பறக்கும் போது, அதன்உடலின் புவிஈர்ப்பு மையம், காற்றழுத்த மையத்துக்குக் கீழே அமைய வழி செய்து Stability என்னும் நிலையான தன்மைக்குத் துணை புரிகிறது. பறவையின் உடற் பரப்பு காற்றில் ஒரு வகைக் கோணத்தில் சாய்ந்து செல்லும் போது, Lift force எனும் உடல் உயர்த்தி விசைமேலெசெல்லவகை செய்யும். Drag force எனும் பின் இழுப்பு விசை அந்த ஓட்டத்தை தடுக்க முனையும். கணிதக் கண்ணோட்டத்தில் காணும்போது, உயர்த்தி விசை, பின் இழுப்பு விசை இரண்டுமே பறக்கும் வேகத்தின் வர்க்கத்துக்கு ஏற்ற விகிதத்தில் அமையும். (Proportional to the square of :he speed).

காற்றோட்டமில்லாத அமைதியான இடத்தில், இடைவிடாது பறப்பதற்கு, பறவைகள் தன் உடல் எடை அளவிற்குத் தக சிறந்த வேகத்தில்பறந்தால்தான் தனக்குத் தேவையான உயர்த்தி விசையை உற்பத்திச் செய்ய இயலும்.

சிறகுகளின் மேல்பாகத்தில் எழும் காற்றோட்டம், அந்த இடத்தில் காற்றமுக்கத்தைக் குறைப்பதால், அந்த இடத்தில் உயர்த்தி விசைக்கு உறுதுணை புரிகிறது. சிறகுகளை வளைத்து ஒடித்து, சிறகுகளின் கீழ்ப்பகுதியில் காற்றமுக்கத்தை அதிகரிப்பதால், பறவைகளின் பின்பகுதியில் காற்று நிலையில் Turbulence எனும் கொந்தளிப்பு ஏற்பட்டு உயர்த்தி விசையைக் குறைக்கின்றது.

சிறகுகளின், நீளத்துக்கும், அகலத்துக்கும் உள்ள உறவை Aspectratio என்கிறோம். பறவைகளில் காணப்படும் விதவிதமான சிறகு வடிவங்கள், அதன் விதவிதமான பறக்கும் முறைமைக்குச் சம்பந்தப்பட்டவையாகும். இவ் வடிவங்கள், கொந்தளிப்பு நிலையைக் குறைத்து நிறைந்த பரப்பளவையும், பறக்கும் திறனையும் ஆற்றலையும் அதிகரிக்கும். Flapping Flight எனப்படும் சிறகடித்துப் பறக்கும் நிலை காற்றில் திருகாணி விசையுடன் முன்னோக்கிச் செல்லத் துணை புரியும். எடுத்துக்காட்டாக Humming Birds எனும் பறவை இனத்தில், விநாடிக்கு 200க்கு மேற்பட்ட முறை சிறகடித்துப் பறக்கும் பாங்கு பெற்றது.

பறவைகள் மூவகையான காற்றோட்டச் சக்தியைப் பயன்படுத்தும் ஆற்றல் பெற்றவை.

1. நிலம் சூடாவதால் மேல் நோக்கி எழும் காற்றோட்டம்.
2. வானில் காற்றோட்ட வேகத்தில் உள்ள வேறுபாடுகள்.
3. கடல் மட்டத்தில் காற்று வேகத்தில் தோன்றும் வேற்றுமைகள்.

பறக்கும்முன் Take of எனப்படும் மேலெழும் நிலை எப்படி? பறவைகளில் இது பலவிதம். குதிப்பன, ஓடுவன், மரத்தின் உச்சியில் நின்று கொண்டு அங்குள்ள காற்றோட்டத்தைப்பயன்படுத்துகின்றன. பறக்க ஆரம்பிக்கும்போது சிறகுகளின் அடி சற்றுப் பெரிதாகவும் விரைவாகவும் அமையும். இதுவும் அதற்குச் சாதகமே.

இதேபோல் Landing எனப்படும் பறக்கும் பறவை, தரையைத் தட்டி நிற்கும் நிலை எப்படி? உடலைத் தாழ்த்தி, வால் சுழற்சியை நிறுத்தி, கால்களை இறக்கி நிற்க முயலும்.

பறவையைக் கண்டு, விமானம் படைத்தோம். பறவையின் பறக்கும் தன்மையை நன்குணர்ந்தோமானால், விமானத்தைச் செம்மைப்படுத்தி, சீர் பெறச் செய்ய முடியும்.

(நன்றி: சென்னை வானொலி)

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில்
கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா,
மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற
சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள்,
இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—
படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள்,
விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட
பாங்கான தோல், தோலினாலான பொருட்கள்,
பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள்,
சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள்,
ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த
பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ்
பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு
ஒன்றுக்கு ரூ 18 கோடிக்கும் மேற்பட்ட
தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை–600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

# நடமாடும் செயற்கை முறைக் கருவூட்டுப் பிரிவு

டாக்டர் யூ. எஸ். கிருஷ்ணமூர்த்தி
பேராசிரியர்,
விலங்கின மரபியல் துறை,
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி.

பசுக்களுக்கும் எருமைகளுக்கும் செயற்கை முறையில் கருவூட்டல், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 1948-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இம்முறையினால் கால்நடை வளர்ப்போர் தங்கள் பசுக்களின் தரத்தை உயர்த்திக் கொள்ள நல்ல வாய்ப்பு ஏற்பட்டது.

செயற்கை முறைக் கருவூட்டல் நிலையத்தின் மூலம் பால் உற்பத்தியினைப் பெருக்க வழி இருந்தும் பசுக்களை அந்த நிலையத்திற்கு எடுத்துச் செல்வதில் உள்ள சிரமங்கள் காரணமாக இந்த வசதியைப் பலர் பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை. பசுக்களைச் செயற்கை முறை கருவூட்டல் நிலையத்திற்குக் கொண்டு செல்வதில் காலத்தாமதம் ஏற்படுவதாலும் பசுக்கள் சாலைகளில் செல்லும்போது ஏற்படும் சிரமங்களினாலும் செயற்கை முறை கருவூட்டல் சரியானமுறையில் செய்தபோதிலும் பசுக்கள் கருத்தரிப்பு சதவிகிதம் குறைவாக உள்ளது.

இக் குறைகளை தவிர்க்கசெய்யும்பொருட்டு 1974-ம் ஆண்டு சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, விலங்கு மரபியில் துறையில் ஒரு நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் பிரிவு துவக்கப்பட்டது.

இப்பிரிவிற்காக ஒரு ஊர்தியும் செயற்கை முறை கருவூட்டலுக்கான எல்லாவிதமான கருவிகளும் தேர்ச்சி மிக்க கால்நடை மருத்துவரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர், கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள இப்பிரிவிற்குத் தொலைபேசி எண் 31506 அல்லது 31508 மூலம் தொடர்பு கொண்டு தங்களுடைய பசுவின் நிலை பற்றிகூறி, தங்களின் முகவரியைப் பதிவு செய்கிறார்கள்.

செயற்கை முறை கருவூட்டல் ஊர்தி காலை மாலை இரு வேளைகளிலும் பணிசெய்து வருகிறது. காலை நேரத்தில் பதிவு செய்யப்படும் மாடுகளுக்கு முற்பகலுக்குள்ளும், பிற்பகலில் பதிவு செய்யப்படும் மாடுகளுக்கு மாலைக்குள்ளும் கருவூட்டல் செய்யப்படுகிறது. இவ்வாறு கருவூட்டப்பட்டும், கருத்தரிக்காமல் மீண்டும் சினைக்கு வரும் பசுக்களுக்கு இரண்டு முறை, கருவூட்டலுக்கான கட்டணமின்றிக் கருவூட்டல் செய்யப்படுகிறது.

இந்த நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் பிரிவினால் ஏற்பட்டுள்ள நன்மைகள் ஏராளமாகும். இவற்றில் முதன்மையானது, பசுக்களைத் தக்க தருணத்திலே கருவூட்டல் செய்து கருத்தரிக்கச் செய்யும் வாய்ப்பு அதிகமாவதாகும்.

சாதாரணமாக, சினைத்தருணம் 24 மணி நேரம் வரைதானிருக்கும். பசுக்களைச் செயற்கை முறை கருவூட்டல் நிலையத்திற்கு நேரடியாக எடுத்துச் செல்வதில் காலத்தாமதம் ஏற்படுவதால் சினைத் தருணம் முடிந்துவிடுகிறது. ஆகவே குறைந்த சதவிகித மாடுகளே கருத்தரிக்கின்றன. சில சமயங்களில் கருவுற்ற மாடுகளும் சினைத் தருண அடிகுறிகளை வெளிப்படுத்துகின்றன. அந்தப் பசுக்களைக் காளையுடன் சேர்க்கும்போது கருச் சிதைவு ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் செயற்கை முறைக் கருவூட்டலில் இது தவிர்க்கப்படுகிறது. ஏனெனில், மருத்துவரின் பரிசோதனை மூலம் கருவுற்ற பசுக்களை அறிந்து கொள்ள முடியும். மற்றும் சில நோய்கள் இருப்பின் பரிசோதனைக்குப் பின் தகுந்த சிகிச்சை மூலம் பசுக்களைச் செயற்கைக் கருவூட்டல் முறையில் கருவுறச் செய்யமுடியும்.

தற்போது ''உறை பதம் செய்யப்பட்ட விந்து'' உபயோகப் படுத்துவதால் நீலகிரி போன்ற வெகுதூரத்தில் வளர்க்கப்படும் தரமிக்க காளைகளின் விந்து கொண்டு வரப்பட்டு சென்னையில் கருவூட்டலுக்கு உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. கருவூட்டப்பட்ட பசுக்களை 90 நாட்களுக்குப் பிறகு பரிசோதித்து சினையா இல்லையா எனக் கண்டறிதல் மிகவும் அவசியமாகும். சினைப் பரிசோதனை, கன்றுகளைப் பராமரித்தல் மற்றும் கால்நடை பராமரிப்புக்கான அறிவுரை வழங்குதல் ஆகிய பணிகளை நடமாடும் பிரிவு செய்து வருகிறது.

சராசரியாக ஒரு நாளில் 10 மாடுகளுக்கு இவ்விதம் கருவூட்டல் செய்யப்படுகிறது. இந்தப் பணி சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மாடுகளுக்குச் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 10,546 செயற்கை முறை கருவூட்டல்கள் இப்பிரிவினால் செய்யப்பட்டுள்ளது. கருத்தரிப்பு சதவிகிதம் 249 ஆக உள்ளது. இம் முறையில் இந்த நடமாடும் பிரிவு கால்நடை வளர்ப்போர்க்குச் சீரிய பணி ஆற்றி வருகின்றது. கால்நடை வளர்ப்போரும் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்தித் தங்கள் பசுக்களின் தரத்தை உயர்த்துவதன் மூலம், சென்னை நகரில் பால்வளம் பெருக உதவி செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தீவனப் பயிர்களில் உணவுச் சத்துக்கள்

சி.ஆ. லட்சுமி நரசிம்மன்
உதவிப்பேராசிரியர்,
தீவனப்பயிர்த்துறை
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

பெரும்பாலும் விவசாய வேலைகளுக்காக நாம் கால் நடைச் செல்வங்களைப் பேணி வளர்க்கிறோம். மேலும் அவற்றிலிருந்து கிடைக்கும் பலவகைத் துணைப் பொருட்களையும் நாம் விவசாயம் மற்றும் வாணிப நோக்கங்களில் பயன்படுத்திக் கொள்கிறோம்.

இன்று வரை உணவு உற்பத்தியில் மக்களின் தன்னிறைவுக்காகப் பாடுபட்டு வந்த நாம், விளையும் பயிரில் தானியத்தை எடுத்துக் கொண்டு தக்கையை மட்டும் கால்நடைகளுக்குக் கொடுத்து வந்தோம். இதனால் நல்ல பலன் எதிர்பார்க்க முடியாதுபோயிற்று. தற்போது நிலைமை மாறியுள்ளது. தீவனத்துக்கெனப் புதிய ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளிடையே பரவலாகச் சிபாரிசு செய்யப்படுகின்றன.

அவற்றில் கால்நடைகளுக்கேற்ற உணவுச்சத்துக்கள் அடங்கியுள்ளதால், தேவைக்கேற்ப அளித்து நாம் நல்ல பயன் பெற முடியும்.

தீவனப் பயிர்களை இருவகையாகப் பிரிக்கலாம். புல்வகை மற்றும் பயறு வகை. இவை இயற்கையாகவே பெருகி வளர்வதும் உண்டு; தற்போது நமது நிலங்களில் குறித்த காலத்தில் பயிர் செய்து நிறைய விளைச்சல் பெறக்கூடிய ரகங்களும் உண்டு. ஆக, தீவனப்பயிர் உற்பத்தி செய்யும் நேரம் நாம் கருத்தில் கொள்ள வேண்டியது அதனுள் அடங்கிய சத்துப் பொருட்களே ஆகும்.

பசுமைத் தாவரங்கள் எல்லாம் கரியமிலவாயு, ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் போன்ற மூலப் பொருட்களை நீருடன் இணைத்துச் சூரிய ஒளியில் பலவகைச் சேமிப்புப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்கின்றன.

ஒவ்வொரு பயிரிலும் நீரின் பங்கு செடியின் எடையில் சுமார் 1/10 பங்கு வரை இருக்கும். பசுமையான தீவனங்களில் 70-85 சதம் வரை ஈரம் இருக்கும். கார்போஹைட்ரேட் எனப்படும் சர்க்கரை மாவுப்பொருட்கள் கால்நடைகளால் எளிதில் செரிக்கப்படக்கூடியவை.

இவை சாதாரணமாக 60-85 சதவீதம் காணப்படும். செல்லுலோஸ் போன்ற பொருட்கள் (35-75 சதம் வரை செரிக்கப் படக் கூடியவை) அவைகளில் இருக்கும். புரதச்சத்துக்கள் புல் வகையில் குறைவாகவும், பயறு வகைப் பயிர்களில் கூடுதலாகவும் இருக்கும். மற்றும் எண்ணெய்ப் பொருட்கள், மணிச்சத்து, சுண்ணாம்பு, பொட்டாசியம், சோடியம், மக்னீசியம் போன்ற உப்புக்களும் தேவையான அளவு இருத்தல் வேண்டும். நுண்ணுணவுப் பொருட்களில் போரான், கோபால்ட், காப்பர், குளோரைடு அயோடின், மாலிப்டினம், இரும்பு மற்றும் சிங்க் இவையும் முக்கியமானவைகளாகும். இவை தவிர உயிர் ஊக்கிகள் எனப்படும் வைட்டமின்கள் (பி காம்ப்ளெக்ஸ், சி, இ, கே) மற்றும் என்சைம்கள் போன்றவையும் இன்றியமையாதவைகளாகும்.

மேலே சொன்னதெல்லாம் தீவனப்பயிர்களில் இருக்க வேண்டியவை. இனி இருக்கக் கூடாதவை விஷத்தன்மையுள்ள சில பொருட்கள். அவை:

ஹைட்ரோ சயானிக் ஆசிட் எனப்படும் பொருள் புல்வகைத் தீவனங்களில் குறிப்பாக சோளம் போன்ற பயிர்களில் துவக்க நிலையில் மிகுதியாகக்காணப்படுகிறது. இது 100 பிபிஎம் அளவுக்குமேல் இருந்தால் கெடுதல் எனக் குறிக்கப்படுகிறது. பொதுவாக 35 நாட்களுக்குள் அறுவடை செய்யப்படும் இளம் பயிரிலும், தழைச்சத்து அதிகம் கொடுக்கப்பட்ட பயிர்களிலும், வறட்சி மிகுந்த காலங்களிலும், இது அதிகமாகக் காணப்படும். சாம்பல்சத்து (கே) இடுவதாலோ, அல்லது பயிரிட்ட பின்பு 45-50 நாட்கள் கழித்து அறுவடை செய்வதாலோ இதன் அளவை வெகுவாகக் குறைக்க முடியும்.

ஆக்ஸலேட் எனப்படும் ஒரு வகை உப்புக்கள் புல்வகைப் பயிரில் 3 சதவீதத்துக்குமேல் இருந்தால் ஆபத்து விளைவிக்கும். இவை கிட்னியில் படிந்து விடுவதால் அவற்றின் இயக்கம் தடைப்படும். இந்த உப்பு இளம் பயிரில் கூடுதலாகக் காணப்படும். தழைச்சத்து கூடுதலாக்குதல் அல்லது வயது அதிகமான நிலையில் அறுவடை செய்தல் போன்ற வழிகளால் இதன் அளவைக் குறைக்க இயலும்.

இவை தவிர நைட்ரேட்டு, டான்னின் போன்ற பொருட்களும், செலினியம், மாலிப்டினம், மங்கனீசு, மற்றும் புரூரின் முதலானவைகளும் அளவில் கூடியிருந்தாலும் அவற்றால் பலவகை இடையூறு ஏற்படும்.

இனி நாம் சிபாரிசு செய்யும் உயர்ரக தீவனப்பயிர்களின் தன்மைபற்றிச் சிறிது தெரிந்துகொள்வோம்.

குதிரை மசால்: இதில் புரதச் சத்து (21 சதம்), சுண்ணாம்புச் சத்து (2.3 சதம்), மணிச்சத்து (0.28 சதம்) உள்ளது. இதைப் பயிரிடுவதால் நிலவளம் கூடுகிறது. கால்நடைகளுக்கேற்ற சத்துணவு.

காராமணி: இது புரதச்சத்து (18.6 சதம்), சுண்ணாம்புச்சத்து (2.1 சதம்) மணிச்சத்து (0.2 சதம்) கொண்டது. நல்ல விளைச்சல் தரக்கூடியது.

நேப்பியர் புல்: புரதச்சத்து (2.5 சதம்) கொண்டது. மிகக் குறைந்த அளவு தண்ணீர் போதுமானது.

தினாநாத்புல்: புரதச்சத்து (8.5 சதம்) சுண்ணாம்புச்சத்து (0.5 சதம் ) மணிச்சத்து (0.2 சதம்) இது வறட்சி மற்றும் நீர் தேங்கும் பகுதிகளுக்கேற்றது. அதிக விளைச்சல் தரக்கூடியது. கால்நடைகள் விரும்பிச் சாப்பிடக் கூடியது. மணற்பாங்கான நிலங்களிலும் பயிரிடலாம்.

கொழுக்கட்டைப்புல்: வறட்சிப்பகுதிக்கு மற்றும் எல்லாவகை நிலங்களிலும் பயிர் செய்யலாம். புரதச் சத்து (16.18 சதம்), சுண்ணாம்பு (0.5 சதம்) மற்றும் மணிச்சத்து (0.2 சதம்) கொண்டது.

மக்காச்சோளம்: புரதச்சத்து (11 சதம்) சுண்ணாம்புச் சத்து (0.66 சதம்), மணிச்சத்து (0.2 சதம்) எல்லா வகை நிலங்களிலும் பயிராக்கலாம். நல்ல விளைச்சல் காணலாம்.

இவற்றில் நல்ல பொறுக்கு வித்துக்கள் உள்ளன. மேற்கொண்டு விவரம் அறிந்து கொள்ளவும், விதைப்பொருட்களுக்கும் தீவனத்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோவை-3 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

# புதிய ரக சாமை


எச். எஸ். சவாது உசேன், உ. இராமநாத பிள்ளை,
வி. சேதுராமன், அ. ஆழ்வார் அருணாசலம்.

பருத்தி மற்றும் சிறு தானியங்கள்
ஆராய்ச்சிநிலையம், கோவில்பட்டி.


தமிழகத்தில் பயிரிடப்படும் சிறுதானியப் பயிர்களுள் சாமை ஒன்று. இது தமிழ்நாட்டில் மொத்தம் 1.67 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடியாகிறது. இப்பயிர் சேலம், தர்மபுரி, மதுரை, கோயம்புத்தூர், வட ஆர்க்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மானாவாரியாகப் பெரும் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. தற்பொழுது, கோ.2 என்னும் சாமை ரகம் சாகுபடியிலுள்ளது. கோ. 2 சாமை ரகத்தைவிட கூடுதல் மகசூல் கொடுக்கக் கூடிய புதிய ரகம் கண்டுபிடிப்பதற்காகக் கோவில்பட்டி, பருத்தி சிறுதானியங்கள் பரிசோதனை நிலையத்தில், தீவிர ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நம் நாட்டின் பல மாநிலங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட பத்தொன்பது சாமை ரகங்கள் பல நிலைகளில் ஆராய்ந்ததில் கே.பி.எம்.14 என்னும் புதிய ரகம் ஒன்று மானாவாரியில் மகசூலிலும், பிற குணங்களிலும் சிறந்தது எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

கே.பி.எம். 14 புதிய ரகம், பூனாவிலுள்ள திட்ட ஒருங்கிணைப்பாளர், அகில இந்திய ஒருங்கிணைந்த சிறு தானியங்கள் வளர்ச்சித் திட்டம், அவர்களால் கொடுக்கப்பட்ட பிஎம்.368 என்னும் வளர்ப்பு (Culture) ஆகும். கே.பி.எம். 14 ரகம் கோவில்பட்டி பருத்தி சிறுதானியங்கள் பரிசோதனை நிலையத்தில் 1976-77, 1977-78ஆம் ஆண்டுகளில் மேல்நிலைப் பரிசோதனையில் ஆராயப்பட்டன.

கோவில்பட்டி, ஆராய்ச்சிநிலையத்தில் கேபிஎம். 14 சாமை மானாவாரியில் எக்டருக்குச் சராசரி 1285 கிலோகிராம் தானியமகசூல் கொடுத்துள்ளது. ஆனால், தற்பொழுது சாகுபடியிலுள்ள கோ: 2 சாமை எக்டருக்கு சராசரி 1005 கிலோகிராம் தானியம் தான் அளித்துள்ளது. கே.பி.எம். 14 புதிய ரகம் கோ. 2 சாமையை விட 27 சதவீதம் அதிக மகசூல் கொடுத்துள்ளது. இப்புதிய ரகத்தின் விளை திறன் நாள் ஒன்றுக்கு 14.3 கிலோ தானியம். ஆனால் கோ 2 சாமையின் விளை திறன் 10. 6கிலோதான். தானிய மகசூல் அன்றி, வைக்கோல் மகசூலிலும் கோ. 2 சாமையைவிட கே.பி. எம். 14 புதிய ரகம் 19.2 சதவீதம் கூடுதல் மகசூல் அளித்துள்ளது.

பரிசோதனைகளில் தொடர்ந்து சாதகமான முடிவுகள் கிடைத்திருப்பதால் கே. பி. எம். 14 புதிய சாமைக்கு கே. 1 (கோவில்பட்டி-1) எனப்பெயர் சூட்டப்பட்டு, தமிழக வேளாண்மைத் துறையால் 1979-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இக் கே.1 சாமை கோவில்பட்டி பருத்தி சிறு தானியங்கள் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்ட முதல் சாமை ரகமாகும்.

கே.1 புதிய ரக சாமை பூச்சி, நோய்கள் தாக்குதலைச் சமாளிக்கும் (Tolerant) தன்மையது. வறட்சியைத் தாங்க வல்லது. இதன் வயது 85-90 நாட்கள். கோ. 2 சாமையைவிட அதிகமாகத் தூர்கள் கட்டும். கதிரின் இணுக்குகளும் கோ.2ஐவிட கூடுதலாக உள்ளன. தானியம் நடுத்தர பருமனுடன் மங்கலான மஞ்சள் நிறமானது. கே.1சாமை அரிசி சமையலுக்கு ஏற்றதோடு சுவையும் நிறைந்தது.

இது, தமிழகத்திலுள்ள மானாவாரி நிலங்களுக்கு ஏற்ற புதிய ரகமாகும். மானாவாரிச் சாகுபடியில் பிற பயிர்களுடன் இதைக் கலப்புப் பயிராகவும் (Mixed Cropping) சாகுபடி செய்யலாம். பருவ நிலை சாதகமாக இரு... களில் இரு... ( Double Cropp... ாரி பகுதி சாமை ஏற்புடையதே. -க்கும்

தமிழகத்தில் மொத்தம் சாமை சாகுபடியாகும் 1.67 இலட்சம் எக்டேர் பரப்பளவில் இப்புதிய ரகத்தைப் பயிரிடுவதன் மூலம் தானிய உற்பத்தி 46760 டன்கள் கூடுதலாகக் கிடைக்கும் என மதிப்பிடப்படுகிறது. இப்புதிய கே.1 சாமை சாகுபடி செய்வதன் மூலம் மானாவாரிப் பகுதி உழவர் பெருங்குடியினருக்கு எக்டருக்கு ரூபாய் 168 கூடுதல் இலாபம் கிடைக்கும்.

ஏற்ற பருவம்: தமிழகத்தின் மத்திய வட மாவட்டங்களில் ஆடிப்பட்டத்திலும் (ஜூன் - ஜூலை). தென் மாவட்டங்களில் புரட்டாசிப் பட்டத்திலும் (செப்டம்பர்-அக்டோபர்) மானாவாரியாகச் சாகுபடி செய்யலாம்.

விதையளவு: ஒரு எக்டேருக்கு எட்டு கிலோ விதை தேவை.

உரமும் உரமிடுதலும்: எக்டேருக்கு 12 டன்கள் தொழுஉரம் அல்லது கம்போஸ்ட் கடைசி உழவின் போது இட்டு உழுதுவிடவும். விதைக்கும்போது கொரு வரிசையில் அல்லது பலபயன் கருவி கொண்டு எக்டருக்கு 40 கிலோ தழைச்சத்தும், 20 கிலோ மணிச் சத்தும் அடியுரமாக இடவேண்டும்.

விதைப்பு முறை: வரிசை வரிசையாக விதைக்க வேண்டும். இதற்குக் கொரு கலப்பை ஓட்டி அல்லது பலபயன் கருவியைப் பயன்படுத்தி விதைக்கலாம். பல பயன் கருவியை உபயோகித்தால் சாகுபடிச் செலவைக் கணிசமாக மிச்சப்படுத்தலாம்.

இடைவெளி: வரிசைக்கு வரிசை 25 செண்டிமீட்டர், செடிக்குச் செடி 10 செண்டி மீட்டர் இடைவெளி கொடுத்து, தூருக்கு ஒரு செடி விடவும்.

பின்செய் நேர்த்தி: விதைத்த 15ஆம் நாளில் செடிகளைக் கலப்பிக்க வேண்டும். தூருக்கு ஒரு செழுமையான செடியை மட்டும் விட்டு, ஏனைய செடிகளைப் பிடுங்கி விடவும். பின்னர் ஒரு வாரம் சென்று கைக் களை எடுத்து களைக் கொத்தால் மண்ணைக் கிளறிக் கொடுக்க வேண்டும்.

தண்டு துளைக்கும் பூச்சியைத் தடுக்க விதைத்த 30 நாட்களுக்குப் பின் ஒரு முறை என்டோசல்பான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு, இரண்டு மில்லி லிட்டர் மருந்து விதம் கலந்து தெளிக்கவும்.

# தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகள் 3

டாக்டர் ஏ. என். பெருமாள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
அடையாறு, சென்னை.

கரடித் தோலை உடம்பு முழுவதும் போர்த்தி ஆடும் ஆடலுக்குக் கரடியாட்டம் என்று பெயர். கண் பகுதி திறக்கப்பட்டிருப்பதனால் ஆடுபவர் நன்றாகக் கூட்டத்தைப் பார்த்து ஆடலாம். முன்னங்கால்களில் கைகளைப் புகுத்திக் கரடி நகங்களைக் காட்டிக் காட்டி ஆடுவது அச்சம் தரும் காட்சியாகத் தோன்றும்.

விழாக்களின்போது மற்ற ஆட்டங்களுடன் சேர்ந்து கரடியாட்டம் நடைபெறும். சிலர் பகலில் வீடு வீடாக வந்து ஆடுவதையும் காணலாம். பணம் காசு பிரிப்பதற்காகவே இவ்வாறு ஆடுகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் கரடியாட்டம் தெய்வத் தொடர்புடன் நடைபெறுகின்றது. இராமநாதபுரத்தில் வணங்கபபடும் கரடிப் பெருமாள் தெய்வத்துக்கும் இந்த ஆட்டத்துக்கும் தொடர்பு இருப்பதாகத் தோன்றவில்லை. இராமாயணப் பாத்திரமான ஜாம்பவான் கரடியின் உருவை உடையவன். அவனுக்கும் இந்த ஆட்டத்துக்கும் தொடர்பு உள்ளதா என்பதைச் சிந்திக்கலாம்.

காளையைப் போன்று முகமூடி அணிந்து ஆடுவதை ரிஷப ஆட்டம் என்று அழைப்பர். இப்பொழுது இந்த ஆட்டம் மறைந்து விட்டதுபோன்று தோன்றுகிறது. நந்தி பகவானுக்கும், ரிஷப ஆட்டத்துக்கும் உள்ள தொடர்பைச் சிந்திப்பது நலம்.

தற்காலத்தில் உண்மையான மாடுகளுக்கு வண்ண வண்ணத் துணிகள் போர்த்தி, பாசிப் பவளங்களால் அலங்காரம் செய்து வீடு வீடாக வந்து பணம் பிரிப்பது சிலருடைய வழக்கம். அது எதைச் சொன்னாலும் தலையாட்டுவதைக் காணலாம். இதிலிருந்து 'தலையாட்டி மாடு' என்ற முதுமொழி உருவாகியிருப்பதை அறியலாம்.

## கிருட்டிண ஆட்டம்

ஒருவர் கண்ணன் போன்று வேடமிட்டு ஆடுவதைக் கிருட்டிண ஆட்டம் என்று கூறுவர். கண்ணன் புல்லாங்குழல் ஊதுவது போன்று அபிநயம் செய்து ஆடுவர். தலையில் சூடி இருக்கும் மயில் பீலி ஆடி அசைவது மிக அழகாகத் தோன்றும். கண்ணனே தங்கள் மத்தியில் நேரில் வந்து விட்டதாக மதித்து நாட்டுப்புற மக்கள் மகிழ்வர்.

கண்ணனுடன் கோபிகையர் சேர்ந்து நடிக்கும் ஆடலும் நடத்தப்படும். பல இடங்களில் பொய்க்கால் குதிரை ஆட்டம், மயில் ஆட்டம், கிருட்டிண ஆட்டம் ஆகியவை சேர்ந்தே நடைபெறும். சிலப்பதிகார காலத்தில் நடைபெற்ற ஆய்ச்சியர் குரவையிலிருந்து இத்தகைய ஆடல், வழிவழியாக நடந்து வந்திருக்க வேண்டும்.

## உறியடி ஆட்டம்

கண்ணன் உறி திருடி தயிர் உண்ணுவதைக் குறிப்பிடும் ஆட்டமாக உறியடி ஆட்டத்தைக் கருதலாம். விழா நடக்கும்போது ஆலயத்தின் முன்பக்கம் இந்த ஆடல் மிகச் சிறப்பாக நடத்தப்படும்.

ஆட்டம் நடக்கும் இடத்தில் ஒரு பானையைக் கயிற்றில் கட்டி உறிபோல் தொங்க விடுவர். கண்ணன் வேடம் தாங்கிய ஒருவர் கையில் ஒரு நீண்ட கம்புடன் ஆடிக் கொண்டே வருவார். பானையை நோக்கிக் கம்பை உயர்த்தவும் பானை மேலே இழுக்கப்படும். இவ்வாறு பல முறை நடக்கும். இறுதியில் பானை உடைந்து சிதறும். உடனே ஆட்டமும் முடிவுறும். கம்புக்கு எட்டாது பானை மேலும் கீழும் செல்வதை மக்கள் சுவைத்துக் காண்பர்.

உறியடி ஆட்டம் இன்று குமரி மாவட்டத்தின் வடக்கு மேற்குப் பகுதிகளில் மிகச் சிறப்பாக நடத்தப்படுகிறது. செங்கல்பட்டு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இத்தகைய ஆட்டம் நடைபெறுவதாக அறியலாம்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் திரௌபதியம்மன் கோயில், தர்மராஜா கோயில் விழாக்கள் நடக்கும்போது உறியடியாட்டம் நடைபெறுகிறது. பத்து நாள் விழாவின் ஒரு நாள் இரவு தீ மிதியும் உறியடியும் நடந்து மக்களை மகிழ்விக்கிறது. தென் மாவட்டங்களில் நடைபெறும் உறியடி ஆடலுக்கும் இதற்கும் சில விதமான மாறுதல்கள் காணப்பட்டாலும் இரண்டின் போக்கும் நோக்கும் ஒன்றாகவே உள்ளன.

புராண நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பல நாட்டுப்புற ஆடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதற்கு உறியடியாடல் சிறந்த சான்றாக உள்ளது. கண்ணனுக்கும் பாரதக் கதைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதினால் இத்தகைய கோயில்களில் இந்தக் காட்சி ஆடலாக நடத்தப்படுகிறது. பள்ளிகளில் நடைபெறும் 'பானை உடைப்புப் போட்டி' உறியடி ஆடலின் மாற்று உருவாக இருக்கலாம்.

### வேதாள ஆட்டம்

மரத்தினால் செய்த வேதாளத்தின் முகத்தை ஒருவன் கட்டிக் கொண்டு, கையில் தீச்சட்டி ஏந்தி ஆடுவதை வேதாள ஆட்டம் என்று கூறுவர்.

முகத்தில் கண்கள் இரண்டும் ஓட்டையாக இருக்கும். அந்த இடங்களில் ஆடுபவரின் கண்கள் பொருந்தி பார்வைக்கு வழிசெய்யும். இந்த ஆட்டம் வேகமாக நடைபெறாது. கோரப் பல்லும், நீட்டிய நாக்கும் அச்சவுணர்வைப் பெருக்கும். ஒரு கையில் வேம்பங் குழையை வைத்து சட்டியிலிருக்கும் நெருப்பை வீசி வீசி ஆடுவர்.

வேதாளத்தைச் சுற்றி நாலைந்து சிறுவர்கள் ஆடுவர். அவர்களுக்குச் செம்புள்ளி, கரும் புள்ளி குத்தியிருக்கும். முகத்தில் கரி பூசியிருப்பர். அவர்களுடைய இரு கைகளிலும் வேப்பங்குழை இருக்கும். அவர்களைக் 'கொள்ளியாப்பை' என்று நாட்டுப் புற மக்கள் கூறுவர். அது கொள்ளி வாய்ப் பேய் என்பதன் மருவாக உள்ளது.

திருநெல்வேலி, குமரி மாவட்டங்களில் இந்த ஆட்டம் மிக அதிகமாக அம்மன் விழாவின் போது நடைபெறுகிறது. ஆலி ஆட்டம் நடக்கும் போது கூடவே வேதாள ஆட்டம் ஆடம்பரமின்றி நடைபெறும். கொடுந் தெய்வக் குறியீடாக இந்த ஆட்டம் நடத்தப்படுவதாகக் கருதலாம். பருத்த ஆனால் கட்டையான உருவமுடையவர்களே பெரும்பாலும் வேதாள ஆட்டம் ஆடுகின்றனர். நாட்டுப்புற மக்கள் நல்லதையும் கெட்டதையும் உருவகித்துத் தங்கள் கலைகளை உருவாக்கியுள்ளனர் என்பதற்கு வேதாள ஆட்டம் ஒரு சிறந்த சான்றாக உள்ளது.

### ஆலியாட்டம்

தென் மாவட்டங்களில் அம்மன் விழாக்கள் நடைபெறும் பொழுது ஆலி ஆட்டம் நடத்தப்படும். மூங்கிலைப் பிளந்து ஒரு பெரிய உருவம் செய்து அதைச் சுற்றி வைக்கோலைப் பரப்பி மனித உருவுக்குக் கொண்டு வருவர். அதற்கு நீண்ட அங்கி போன்ற சட்டை அணிவர். தலை மிகப் பெரிதாகவும் கோரமாகவும் இருக்கும். அதை மரத்தால் செய்து மூங்கில் உருவுடன் பொருத்துவர். ஆலியின் உட்பகுதி கூடாகவே இருக்கும். அதற்குள் மனிதர் நின்று ஆடுவர். அதன் மார்பு பகுதியில் ஆட்டக்காரரின் கண்கள் தெரிவதற்காக இரண்டு துளைகள் இருக்கும்.

மனிதன் அதைத் தூக்கி ஆடும் போது ஆலி மிகப் பருத்து வளர்ந்த அசுர உருவமாகத் தோன்றும். மூன்று அல்லது நான்கு ஆலிகள் இவ்வாறு ஒரே சமயம் ஆடுவதைக் காணலாம். அவற்றில் குறவன் குறத்தி ஆகிய இரு ஆலிகளும் மிகச் சிறப்பாகக் கருதப்படும். குறத்திக்குப் பெண்ணுடை அணிவித்துக் காட்டுவர். காது நீண்டு வடிந்து போலி நகைகளுடன் காணப்படும். ஆண் ஆலி கையை விரித்தவாறு ஓடி ஓடி ஆடும். பெண் ஆலி அதைத் தொடர்ந்து மெதுவாக ஆடும். இரண்டும் ஊளையிடுவது சிறுவரை அஞ்சி ஓடுமாறு செய்யும்.

ஒரு ஆலி குழல் ஊத இன்னொன்று கொட்டு அடிப்பது போன்றும் உருவங்களைச் செய்து ஆடுவர். உண்மையாக இசைக்கப்படும் நாதஸ்வரம் அல்லது நையாண்டி மேள வாத்தியங்களின் தாள ஒலிக்குத் தக்கவாறு ஆட்டம் நடைபெறும். அம்மன் ஊர்க் கோலம் வரும்போது ஆலியாட்டம் தெருவைச் சுற்றி நடக்கும். பல இடங்களில் நின்று நின்று ஆடுவர். அச்சம் மிகுந்த ஆலி ஆட்டத்தை ஆர்வத்தோடு நாட்டுப் புற மக்கள் கண்டு களிப்பர்.

### கணியான் ஆட்டம்

சுடலைமாடன், இயக்கியம்மன், பிச்சை காலன், செங்கிடாக்காரன் ஆகிய கோயில் விழாக்களில் கணியான் ஆட்டம் நடைபெறுவதைத் திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெருவாரியாகக் காண

யாலை சுடலைமாடனுடன் கணியான் நெருங்கிய தொடர்புடைய ஆமிநருங்கிய தொடர்புடையது என்பதைச் சிறப்பாகக் குறிப்பிட்டுஞ்பதைச் சிறப் பாகக் குறிப்பிட்டுக் கூறத்தான் வேண்டும்.

சிவபெருமான் இரண்டு முரடர்களைப் பிறப்பித்துப் பூவுலகத்துக்கு அனுப்பினாராம். அவர்கள் இருவரும் சுடலைமாடனாகவும் கணியானாகவும் உலகுக்கு வந்ததாக ஒரு நாட்டுப்புறக் கதை கூறுகிறது. கணியான் சுடலைமாடனுக்குப் பல விதத்தில் உதவி செய்வதாகக் கதையில் விளக்கப்படும்.

கணியான் ஆட்டத்தின் ஒரு பகுதி இக்கதையின் முக்கிய இடத்தை உருவகித்துக் காட்டுவதாக அமையும். கோயில்கொடை நள்ளிரவு நடந்து கொண்டிருக்கும்பொழுது சுடலைமாடன் ஆவேசங் கொண்டு ஆடும் 'சாமியாடி' சுடலைவரை ஓடிச்சென்று திரும்பி வருவான். அப்பொழுது கோயிலில் கணியான் ஆட்டம் நடந்து கொண்டிருக்கும். சுடலைமாடன் வந்ததும் கணியன் தன் நாக்கு அல்லது கையை ஒரு கத்தியால் காயப்படுத்தி இரத்தம் எடுப்பான். அதை இருபத்தியொரு இலையில் பங்கிட்டு சுடலைமாடனின் முன் வைப்பான். சாமி ஆடுபவன் அவற்றை எடுத்து நக்கிக் குடிப்பான். குருதியைக் கொடுத்துக் கூடி வந்தவனுக்கு உதவும் கணியனின் பண்புக்கு இது ஓர் எடுத்துக் காட்டாக அமையும். பார்ப்பவர்களுக்கு அது ஒரு பயங்கரக் காட்சியாகத் தோன்றும். கணியனின் காயத்தை மாற்ற அந்த இடத்தில் திருநீறு பூசப்படும்.

கணியான் ஆடுவதைத் தொழிலாகக் கொண்ட ஓர் இனம், கணியான் என்ற பெயருடன் தமிழ் நாட்டின் தென்பகுதியில் உள்ளது. அவர்கள் ஐந்து பேர் சேர்ந்து ஒரு குழுவாக இந்தக் கலையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் முன்பாட்டுக்காரர். இருவர் தமுக்கு அல்லது மகுடன் கொட்டி பாடுபவர். இன்னும் இருவர் பெண்வேடம் புனைந்து கணியானாக ஆடும் கலைஞர்கள்.

ஆட்டத்துக்கு 'அச்சாரம்' வாங்கியதும் பதினைந்து நாட்கள் தொடர்ந்து விரதம் காப்பார்கள். இவ்வாறு காக்கப்படும் நோன்பு முறைகள் இந்தக் கலையின் புனிதத் தன்மையைக் காட்டும். உணவு, அன்றாட வாழ்க்கைச் செயல்பாடுகள் அனைத்திலும் சில விதமான கட்டுப்பாடுகள் விதித்து நோன்பு நோற்பர். விழா நாளில் ஆட்டம் தொடங்குவதற்கு முன் தனிப்பட்ட முறையில் சில பூசைகளைச் செய்வர். பின்னரே ஆட்டம் தொடங்கப்படும்.

முன்பாட்டுக்காரர் ஒரு பாடலைத் தொடங்கிப் பாடுவார். உடனே அதனைப் [illegible] பாட மகுடன் கொட்டுது பாடி ஆடியலைத் தொ[illegible] வாறு [illegible]ளம் அடிப்பர். பாடலுக்குத் தக்கபடி கணியான் இருவரும் குதித்துக் குதித்து ஆடுவர். அங்கும் இங்கும் துள்ளுவர். சுற்றிச் சுற்றி ஆடுவார்கள். மக்கள் கூட்டம் அவர்களைச் சூழ்ந்து நின்று சுவைக்கும். சாமியாடும் போதும் 'கணியாட்டம் நடக்கும். சில சமயம் சாமியாடிக்கும் கணியானுக்கும் போட்டி ஆட்டமே நடைபெறும். இதனை மக்கள் மிகவும் விரும்பிக் காண்பர்.

கணியான் ஆடுபவர்களும் பாடுவது உண்டு. பெரும்பாலும் எந்தத் தெய்வத்துக்கு விழாவோ அந்தத் தெய்வத்தின் கதையே பாடலாகப் பாடப்படும். கணியான் ஆட்டம் நாட்டுப்புற மக்கள் மிகவும் சுவைத்து மகிழும் கலையாக இன்றும் சிறந்து உள்ளது.

**பகல்வேடம்**

சாதாரண மக்களின் தொழில் முறைக் கலையாகப் பகல் வேடம் உள்ளது. இது வட மாவட்டங்களில் மிகப் பரவலாக நடைபெறும் கலையாகும். பலவித வேடங்களைப் புனைந்து கொண்டு ஏழை மக்கள் வீட்டுக்கு வீடு ஆடிப்பாடிப் பரிசில்களைப் பெற்றுச் செல்வது வழக்கம். பலர் பல வேடங்கள் பூண்டு கும்பலாகச் செல்வர். கடைகளுக்கு முன்னாலும் இவர்களுடைய ஆட்டம் நடக்கும். ஆண்களே பெண் வேடம் தாங்கி நடிப்பர். இவர்கள் பல வேடங்கள் புனைவதனால் சில இடங்களில் இவர்களைப் பல வேடக்காரர் என்று கூறுவர். பரிசில் தரும் வீட்டாரைப் பாடல்களால் பலவாறு வாழ்த்திச் செல்வர்.

கலையை விடவும் பங்கு பெறுவோருடைய பிழைப்பே இந்த ஆட்டத்தில் முக்கிய இடம் பெறுவதனால், காலம் இதன் பெருமையைப் பெரிதும் குன்றச் செய்து விட்டது. இப்பொழுது இந்த ஆட்டம் பேரளவு மங்கி மறைந்து விட்டது.

**உறுமிக் கோமாளி ஆட்டம்**

பொங்கல் அல்லது அதனை அடுத்த இரு தினங்களில் உறுமிக் கோமாளி ஆட்டம்நடத்தப்படும். இதில் ஒரு கோமாளியின் பங்கு மிக முக்கியமானது. அவன் பளபளப்பான வண்ண ஆடைகள் அணிந்திருப்பான். அவனுடைய ஆடையின் பல பகுதிகளில் குஞ்சங்கள் தொங்க விடப்பட்டிருக்கும். தலையில் ஒரு குல்லா அணிந்திருப்பான். அதன் நுனி நீண்டு காணப்படும். அதில் ஒரு குஞ்சம் தொங்கும். அவன் விதவிதமான வேடிக்கைகளைச் செய்து ஆடிப் பாடுவான்.

கோமாளிக்குத் துணையாகச் சிலர் ஆடுவர். அவர்கள் இடுப்பில் பாவாடை கட்டி மேலே சட்டை அணிந்திருப்பர். உருமாறும் கட்டி வருவர். கழுத்தில் போடப்பட்டிருக்கும் அங்கவஸ்திரம் நீண்டு பறந்து கொண்டிருக்கும்.

இவர்களுடைய இசைக் குழுவில் ஐந்து பேர் இருப்பர். ஐந்து துளைகளுடைய புல்லாங் குழலும் தாதப் பலகை (கஞ்சிரா)யும் முக்கிய கருவிகளாகக் கருதப்படும். வளைந்த கம்பிகளைக் கொண்டு உரசி ஒலி எழுப்பப்படும். உறுமி மேளத்தால் இந்த ஆட்டம் இந்தப் பெயரைப் பெறுகிறது. இரண்டு புல்லாங்குழல்கள், தப்பு, உறுமி, இரு கம்புகளால் அடித்து முழக்கப்படும் ஒரு முகப்பேரிகை ஆகிய கருவிகள் இசைத்துணைக்கு உதவும் கருவிகளாக உள்ளன.

முதன் முதலில் கோமாளி அறிமுகமாக 'கோமாளி தாசரி ஒச்சேனய்யா' என்று பாடிக் கொண்டு வருவான். 'விஷ்ணு பக்தனான கோமாளி நான் இதோ வந்து விட்டேன்' என்று கூறிக் கொண்டு ஆடத்தொடங்குவான். இந்தக் குழுவினர் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட இரண்டு காளைகளையும் கொண்டு வருவது உண்டு. காளைகளின் மேல் வ்ண்ணத்துணிகள் போர்த்தப் பெற்றிருக்கும்.

உறுமிக் கோமாளி ஆட்டத்தினர் வீடு வீடாகச் சென்று பரிசு பெறுவர். இவ்வகை ஆட்டம் வட மாவட்டங்களில் அதிகமாக நடைபெறுகிறது.

## 1979ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்ட காவல்துறை அலுவலர்களுக்குப் பொது மன்னிப்பு!

1979-ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் காவல்துறையைச் சேர்ந்த ஒரு பிரிவினர் போராட்டம் நடத்தினர். அதன் காரணமாக அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட காவல்துறையினருக்கு அலுவல் பணியில் பிழைக்குறி அளித்தல் (பிளாக் மார்க்) பதவி நீக்கம் செய்தல் போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டன. அவர்கள் தங்களது நடவடிக்கைக்கு வருத்தம் தெரிவித்து முறையீடு செய்ததையும், தண்டனைகளால் அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகளையும் கருத்தில்கொண்டு, இந்நிலையை அரசு அனுதாபத்துடன் மறு பரிசீலனை செய்தது.

போராட்டத்தில் ஈடுபட்ட காவல்துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளால் அவர்களது குடும்பம் அடைந்த அதிக பெருந்துயரத்தினையும் தவறான ஆலோசனையினால் அவர்கள் மேற்கொண்ட போராட்ட நடவடிக்கைகளையும் அரசு கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு , அரசு குற்ற மன்னிப்பு [ ஜெனரல் ஆம்னெஸ்ட்டி ] அளித்து,போராட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகள், காவல்காரர்கள் ஆகியோர்களுக்கு அளிக்கப்பட்ட எல்லா தண்டனைகளையும் ரத்து செய்து, இப்பொழுது அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்போராட்டம் சம்பந்தமாக ஒரு சில காவல்துறை ஊழியர்கள் மீது தொடரப்பட்ட ,கிரிமினல் வழக்குகளை வாபஸ் பெற அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.